நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

சுற்று 05 ஆகஸ்ட் 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 22


## அமைச்சரின் அபாயச் சங்கு!

மலையகத்தில் தோன்றியுள்ள அபாயகரமான நிலையை முளையிலேயே கிள்ளிஎறிய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து பாராளுமன்றத்தில் அமைச்சர் தொண்டமான் அபாயச் சங்கு ஊதியுள்ளார். அத்துடன் நாடு முழுவதுமான அவசரகாலச் சட்டப் பிரகடனத்திற்குத் தமது பத்துக் கைகளையும் உயர்த்தி ஆதரவு தெரிவித்துள்ளார். அமைச்சரின் அபாயச் சங்கு யாரைக்குறி வைத்து ஒலித்துள்ளது? பழிவாங்கும் படலம் ஆரம்பமாகப் போகிறதா?

நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம்

மாகாணசபை தேர்தல் ஒத்திவைப்பு

பேச்சுவார்த்தை நடாத்த மறுப்பு

பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி உத்வேகம்

# பேரின யுத்தவாதிகளுக்கு வெற்றி!

**யுத்தமா? தேர்தலா?. என்பதில் சகலவற்றையும் பின்னுக்கு தள்ளிவிட்டு யுத்தத்தை முழுமூச்சாக முன்னெடுப்பது என அரசாங்கம் முடிவுக்கு வந்துள்ளது. இது பேரினவாத வெறியர்களுக்கும் யுத்த விஸ்தரிப்புவாதிகளுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியையும் பலத்தையும் வழங்கி உள்ளது. இதன்மூலம் ஜனநாயக மனித உரிமைகள் யாவும் துப்பாக்கிகளுக்கு முன்னே நிறுத்தப்பட்டுள்ளன. இது இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கும் மக்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரும் சவாலும் அச்சுறுத்தலுமாகும்.**

ஜனநாயகத்தை பாதுகாப்போம், மனித உரிமைகளைப் பேணுவோம், மக்களுக்கு சிறந்த வாழ்க்கையை உத்தரவாதப்படுத்துவோம் என்னும் வாக்குறுதிகளுடன் தான் பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து கொண்டது. அத்துடன் இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வு காணப்படுமே தவிர யுத்தத்தை முன்னெடுக்க மாட்டோம் என்று வாக்குறுதி வழங்கினார்கள். இவற்றின் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது அமோக ஆதரவை வழங்கி அறுபத்திரண்டு வீத வெற்றிக்கு வழி வகுத்தனர். ஆனால் இன்று யாவும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு நேர் எதிர்மாறாகவும் தலைகீழாகவும் இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகிறதைத் தான் மக்கள் காண வேண்டி உள்ளது. இது இருண்ட ஒரு ஆட்சிக் காலத்தை தொடக்கி வைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

நாடு முழுவதும் அவசரகால நிலையை பிரகடனம் செய்து அதன் வாயிலாக மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைத்த முடிவானது மக்களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை அப்பட்டமாகவே பறித்துள்ளதாகும். இந்த முடிவு யுத்தத்தை முழு மூச்சாக முன்னெடுக்க நிற்கும் யுத்தவாதிகளுக்கு மேலும் பலத்தை வழங்கியுள்ளது. யுத்தம் என்பதை சாட்டாக வைத்து எந்தெந்த முனைகளில் ஜனநாயக-மனித உரிமைகளை மறுத்து நிராகரிக்க

## ஜனநாயகத்திற்குப் பலத்த அடி

## அமெரிக்க கொள்கைக்கு அங்கீகாரம்

முடியுமோ அவற்றை எல்லாம் செய்வதற்கு அரசாங்கம் தயாராகி விட்டதையே தேர்தல் ஒத்திவைப்பு எடுத்துக்காட்டுகின்றது. ஏற்கனவே யுத்தச் செய்திகளுக்கு தடைவிதிக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து தேர்தல் ஒத்திவைப்பு இடம் பெற்றுள்ளது. அடுத்து நாடுதழுவிய அவசரகாலச் சட்டத்தின் கீழ் எவ்வெவை எடுக்கப்படுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. மேலும் யுத்தத்தை எதிர்த்து நியாயமான அரசியல் தீர்வை வலியுறுத்தி ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடி வரும் நேர்மையான இடதுசாரி சக்திகளுக்கு எதிராக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கத் துணிந்தாலும் ஆச்சரியம் கொள்ள இடமில்லை. காரணம் இன்று அரசாங்கத்தினுள் யுத்தவாதிகளினதும், பேரினவாத வெறியர்களினதும் கைகளும் குரல்களுமே ஓங்கி ஒலித்து நிற்கின்றன. அத்தகையவர்களுக்கு பலம் சேர்க்க பௌத்த பீடாதிபதிகளும் பேரினவாத அறிவுஜீவிகளும் களத்தில் இறங்கி உள்ளனர். ஏற்கனவே தேர்தல் வேண்டாம் யுத்தத்தை வேகப்படுத்தி நடத்து மாறே பௌத்த பீடாதிபதிகள் வலியுறுத்தி வந்தனர். அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி என்னும் அமைப்பு தற்போது உத்வேகம் பெற்று நிற்கிறது. அதில் இனவெறி பிடித்த அறிவு ஜீவிகள் எனப்படுவோரும் முன்னாள் ராணுவ உயர் அதிகாரிகளும் அந்த அமைப்பின் தீவிர செயற்பாட்டாளர்களாக உள்ளனர். இவர்கள் தான் யுத்தத்தை தீவிரப்படுத்தி முன்னெடுக்க வற்புறுத்தி நிற்பதுடன் வெறித் தனமான பேரினவாத பேச்சுக்கள் அறிக்கைகளை விட்டும் வருகின்றனர். இவர்களது விருப்பத்தை அரசாங்கம் நிறைவேற்றி வைத்துள்ளமை அமெரிக்காவிற்கு மனக்குளிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் யுத்தத்தை விஸ்தரித்து நடாத்த வேண்டும் என்ற அமெரிக்கா வின் ஆலோசனைக்கும் இதன்மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இவையாவற்றையுமே பிரதிபலிப்பவராக அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை இருந்து வருகிறார். அவருக்கு கிடைத்த வெற்றி அவரின் பின்னால் உள்ளவர்களின் வெற்றியாகும்.

நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப் பட்டதையும் மாகாணசபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதையும் நியாயப்படுத்திய பாராளுமன்ற உரைகள் விநோதம் நிறைந்தவைகளாகக் காணப்பட்டன. மாகாண சபைத் தேர்தலுக்கு யுத்தத்தின் காரணமாக பாதுகாப்பு அளிக்க முடியவில்லை என்றால் எதிர் காலத்தில் எத்தகைய தேர்தல்களும் இடம்பெற மாட்டாது. நாட்டின் பலபாகங்களில் பாதுகாப்புக்கு அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக மலையகத்தில் நிலைமை அபாயகர மானதாக உள்ளதாகவும் கூறப்பட்டது. அதற்கு தொண்டமான் ஆமா போட்டு உடன் நடவடிக்கை எடுக்கும்படி குரல் கொடுத்துள்ளார். மலையக இளம் தலைமுறையினர்



பழிவாங்கப்படுவதற்கு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படப்போவதை கோடிட்டுக் காட்டுகிறது. மாகாணசபைத் தேர்தல் நிலைமை சீரடைந்ததும் யுத்தம் முடிவடைந்ததும் இடம்பெறும் எனக் கூறப்பட்டது. ஆனால் மற்றொரு சிரேஷ்ட அமைச்சர் மாகாணசபை முறை தேவைதானா என இரண்டு முறை சிந்திக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.


யுத்தத்தை முன்னெடுக்கும் முன்னுரிமை முடிவால் நாடு நாசத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. யுத்தத்தை தீவிரமாக நடத்தி வெற்றி பெற்ற பின்பே தேர்தல் என்னும் பௌத்த பீடாதிபதிகளினதும் பேரினவாத வெறியர்களின் ஆணையும் விருப்பமுமே அரசாங்கத்தின் முடிவாகி உள்ளது. யுத்தம் முடியும் வரை பாராளுமன்றமும் வேண்டாம்,

12ம் பக்கம் பார்க்க

## மலையகத்தை இலக்கு வைக்கும் பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி

மலையக தமிழ்மக்கள் இந்திய வம்சாவளி மக்கள் என்றபேரில் அணிதிரட்டப்பட்டு இந்திய ஆதிக்கத்தை இங்கு எற்படுத்தி திட்டங்கள் தீட்டப்படுவதாகவும், மலையக தமிழ் மக்களுக்கென 101 தமிழ் கிராமசேவகர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட இருப்பதாகவும், மலைநாட்டை இந்தியர்களின் தாயகமாக்கி பயங்கரவாதிகளின் கைகளில் அதனை ஒப்படைக்க திட்டங்கள் இருப்பதாகவும் நாடெங்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. பயங்கரவாத ஒழிப்பு முன்னணி என்ற அமைப்பே மிகவும் கவர்ச்சிகரமான அச்சு வேலைப்பாடுகளுடன் மேற்படி போஸ்டர்களை ஒட்டியுள்ளது.

கண்டிய சிங்களவர்களை மையமாக கொண்டு பௌத்த சிங்கள பேரினவாத கருத்தியலை மேலும் வளப்படுத்தி உடனடி வேலைத் திட்டமாக மலையக தமிழ் மக்களுக்கு எதிரான பிரசார வேலைகள் மேற் கொள்ளப் படுகின்றன. தொண்டமானை



மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் மேற்படி துவேஷ பிரசாரங்கள் குறித்து அரசாங்கம் அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை.

ஆனால் மலையக தமிழ் தீவிரவாத இளைஞர்களினால் தொண்டமானை கொலை செய்வதற்கான சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் மலை யகத்தில் தமிழ் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரிக்க இடமுண்டு என்றும் கூறி அரசாங்கம் நாடெங்கும் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் மேற்படி நிலைப்பாட்டிற்கு தொண்டமான் வக்காலத்துவாங்கி பாராளுமன்றத்தில் பேசியுள்ளார். அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் அதிகமாக வாய் திறக்காத தொண்டமான் மலையகத்தில் தலைதூக்கும் தமிழ் தீவிரவாதத்தை ஆரம்பத்தி லேயே கிள்ளி எறியவேண்டும் என்று இம்முறை பேசியுள்ளார்.

12ம்பக்கம் பார்க்க

## வடக்கில் நிவாரண வெட்டு

## பட்டினியால் பழிவாங்கத் திட்டம்

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தை யூலை மாதம் முதல் அரசாங்கம் வெட்டி யுள்ளது. முப்பத்திஇரண்டு வீதமான நிவாரண வெட்டுக் குறைப்பினால் லட்சக்கணக்கான இடம் பெயர்ந்து அல்லலுற்றுவரும் மக்கள் பட்டினியை எதிர்நோக்கி உள்ளனர். அரசாங்கம் முன்னெடுத்து வரும் கொடிய யுத்தத்தினால் சகல வற்றையும் இழந்து சொந்த இடங்களையும் விட்டகன்று இடம் பெயர்ந்த மக்களாகப் பல வருடங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் நிரந்தர வருமானமற்ற தொழில்கள் இல்லாத நிலையில் அரசாங்கம் வழங்கி வந்த உலர்உணவு நிவாரணத்திலேயே வாழ்க்கையை ஏனோதானோ என நடத்தி வருகின்றனர். தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அன்றாட கூலி உழைப்பாளர்கள் என்போர் இந் நிவாரண வெட்டினால் பாதிக்கப் பட்டுள்ளனர். கழிவுகள் கலந்த அம்மாப்பச்சை அரிசியும், வண்டுகள் நிறைந்த அமெரிக்கன் மாவும் அவியாத மைசூர் பருப்பும், சீனியும் தான் முக்கியமான நிவாரண உலர் உணவாக வழங்கப்பட்டு வந்தன.

12ம்பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# பழம் பண்டிதர் ஒரு நச்சுமரம் !

தமிழர் பழமைவாதத்தின் நோக்கும் போக்கும் எவ்வாறு தற்போது நிலையெடுத்து நிற்கின்றது என்பதையும் அது கொழும்பில் அணி சேர்ந்து நிற்கும் மையங்கள் எவை என்பதையும் மே மாத புதிய பூமியில் சங்கிலியன் என்பவர் எழுதியிருந்தார். அவரது கருத்துக்களை நிரூபிக்கும் வகையில் கொழும்பில் தன்னை தக்கவைத்து வரும் ஆசாமி ஒருவர் பகிரங்கமாகப்பேசியும் எழுதியும் வருகிறார். இந்த ஆசாமி 97ம் ஆண்டிற்கு முன்பு யாழ்ப்பாணத்திலே உச்சியிலே ஊசிக் குடுமியும் மேலே காவியும் கீழே கால் சட்டையும் அணிந்து கம்பனைக் காப்பாற்றும் பெயரில் உழைப்பும் பிழைப்பும் நடாத்தி வந்தவர். அங்கே தொடர்ந்தும் வியாபாரம் ஓடாது என்பதை உணர்ந்து கொண்டதால் மனிசன் இடத்தை கொழும்பிற்கு மாற்றிக் கொண்டார். ஏற்கனவே கொழும்பில் கொழுத்து நின்ற சில தமிழ் முதலாளிகளைச் சிக்கெனப் பிடித்தும் கொண்டார். உடனே கொழும்பில் கழகமும் தொடங்கி இசை இயல் வேள்விகளும் நடாத்தி கொழும்பு வாழ் புளிச்சல் ஏவறை விட இடமின்றி இருந்த தமிழ்ப் பெரும் குடியினர் மத்தியில் தன்னை நிலை நிறுத்தியும் கொண்டார். தமிழ் சைவம் இரண்டையும் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு உயர் குடித்தமிழர்களிடம் பெற வேண்டியவற்றைப் பெற்று தன்னை ஒரு அறிவாளியாகக் காட்ட முற்பட்டு நிற்கும் இந்த ஆசாமி அண்மைக் காலங்களில் பேசியும் எழுதியும் வரும் நச்சுத்தனமான கருத்துக்கள் பலரைச் சினம் கொள்ள வைத்துள்ளது.

இவர் தினக்குரல் பத்திரிகையில் பழம் பண்டிதர் என்னும் பெயரில் எழுதி வரும் கருத்துக்கள் தமிழர் பழமைவாதப் பிற்போக்கின் தெளிவான நிலையை வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடியும். அது மட்டுமன்றி தனது மேடைப் பேச்சுகளிலும் கோவில் பிரசங்கங்களிலும் கம்பராமாயண விரிவுரைகளிலும் அவரது வாயில் வந்து கொள்வதெல்லாம் பழைய சனாதனக் கருத்துக்களேயாகும். பெண்களை இழிவு படுத்துவதிலும், ஆணாதிக்கக் கருத்துக்களை அடித்துக் கூறுவதிலும் அசல் பிற்போக்காளர் இந்த ஆசாமி. அண்மையில் முஸ்லிம் மக்களைப் பற்றி மிக இழிவாக எழுதித் தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டதுடன் தன்னைச் சுற்றி உள்ளவர்களின் எண்ணங்களும் அதுவேதான் என்பதையும் உறுதி செய்திருந்தார். அதற்கு முன் ஒரு தடவை மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இழிவுபடுத்தி அவர்கள் ஒரு குடிகாரக் கூட்டம் என வர்ணித்திருந்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில் நாவலர் கொண்டிருந்த சாதி வெறியை நியாயப்படுத்தி தமிழையும் சைவத்தையும் பாதுகாக்க நாவலர் அவ்வாறு சாதியாசாரம் பார்த்தது சரியானதே என்றும் கூறிக்கொண்டார். வேறொரு சந்தர்ப்பத்தில் வர்ணாச்சிரமக் கோட்பாடு முற்றிலும் சரியானதென வாதிட்ட மனிதரும் இவரேதான். சிலவேளை அடுத்தடுத்த தினக்குரலில் இப்பழம் பண்டிதர் அவரவர் தத்தமது சாதிக்குரிய தொழில்களைச் செய்தால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாது போய்விடும் என்று எழுதினால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

இத்தகைய பிற்போக்கின் மொத்த உருவத்தைத்தான் முற்போக்கின் பெயரால் இலக்கிய விபச்சாரம் நடாத்தும் மல்லிகை ஜீவா உச்சிமுதல் உள்ளங்கால்வரை புகழ்ந்து பேசித் தனது அடிமை விசுவாசத்தை தெரிவிக்கிறார். இப்படியும் ஒரு இலக்கியப் பிழைப்பா என்றே கேட்க வேண்டியுள்ளது. இந்தப் பழமைவாதியின் திருக்கரத்தால் தான் முற்போக்கின் மூத்த தலைவரான பிரேம்ஜி என்பவர் பொன்னாடைப் போர்வை பெற்று அந்நிய தேசம் அடைந்து கொண்டார். ஒரு சாதாரண பருத்திச் சால்வையை ஒரு சாதாரண ஏழை எழுத்தாளனின் கைகளால் போர்த்தப்பட்டு அதனை ஒரு கௌரவமாகப் பெறக்கூட இந்த முற்போக்கு முலாம் பூசிய எழுத்தாளர் சங்கத் தலைவருக்கு முடியாமல் போய்விட்டது பரிதாபம்தான்.

இந்தியா அணுக்குண்டை வெடிக்க வைத்ததும் அதற்குப் பழம் பண்டிதர் பல்லவி பாடி அணு விஞ்ஞானி சிதம்பரம் என்ற தமிழர் இல்லாவிடில் இந்தியா அணுக் குண்டையே வெடித்திருக்காது என்ற தோரணையில் எழுதினார். ஆனால் அவ் அணுக்குண்டு வெடிப்பில் அப்துல்கலாம் என்ற முஸ்லீம் முக்கிய விஞ்ஞானியாக இருந்ததை தனது தமிழ்ப் பழமைவாதத்தினுள் புதைத்தும் கொண்டார். இத்தகைய அசல் பிற்போக்கின் மொத்த உருவத்தைக் கொண்டு சொல்ல வேண்டியவை களையும் எழுதவேண்டியவை களையும் தமிழர் பழமைவாதப் பிற்போக்கு சனாதானிகள் செய்வித்து வருகின்றனர். இதனை எதிர்த்து அம்பலப்படுத்த வேண்டியது சமூக அக்கறை உள்ள அனைவரினதும் கடமையாகிறது.

தமிழின் பெயரால் சைவத்தின் பெயரால் எவரும் பிழைப்பு நடத்தட்டும். ஆனால் அத்தகைய பிழைப்புக்காக மலையக மக்களையும், முஸ்லிம் மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும், பெண்களையும் பேச்சின் மூலமும் எழுத்தின் மூலமும் இழிவு படுத்திக் கொள்ளும் நிலையினை எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படிப்பட்ட பிற்போக்கின் மொத்த உருவத்திற்கு எழுதவும் பேசவும் சந்தர்ப்பம் கொடுப்பவர்கள் அறிந்து தெரிந்து கொடுக்கிறார்களா? அல்லது நச்சு மரத்தை நல்ல மரம் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார் களா? என்றே கேட்க தோன்றுகிறது.

கொழும்பு 3. **க. நடேசமூர்த்தி**

# மலையக மாணவர்கள் திறமையற்றவர்களா?

மலையக மாணவர்கள் பல வகையில் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இதில் முக்கியமானது வறுமையே. இதனால் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு போசாக்குள்ள உணவுகளையும் கல்வியையும் சரியான முறையில் கொடுக்க முடியாமல் தவிக்கின்றனர். போக்குவரத்தும் மாணவர்களின் கல்விக்கு பாதகமாகவுள்ளது. இவ்வாறு மாணவர்கள் வறுமை, போசாக்கின்மை, ஒழுங்கான போக்குவரத்து ஆகிய பிரச்சனைகளால் சிக்கித் தவிக்கின்றனர்.

வறுமையை நோக்கும்போது பெற்றோருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. இதனால் அவர்களுக்கு பெரும் சுமைகளும் சுமத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சுமைகளை சுமக்க முடியாத பெற்றோர்கள் நிம்மதி இழந்து மது போன்ற தீய பழக்கத்திற்கு தம்மை இட்டுச் செல்கின்றனர். அதனால் பிள்ளைகளுக்கு வழிநடத்தல் பிழையாக அமைந்து விடுகிறது. அத்துடன் பெற்றோருக்கு வழிநடத்தும் முறை பற்றிய ஆலோசனை கிடைக்காமையினாலும் பிள்ளைகளை ஒழுங்காக வழிநடத்த முடிவதில்லை என்பதும் ஒரு பிரச்சனையாகும். ஆனால் அடிப்படையை நோக்கும் போது வறுமை, போசாக்கின்மை, மருத்துவ ஆலோசனை, போக்குவரத்து என்பன மலையகக் கல்விக்கான முக்கிய தடைகளாகும். கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமையால் வயது வராத பருவத்திலேயே ஓட்டல்களுக்கும், வீட்டு வேலைகளுக்கும் சிறுவர்கள் அனுப்ப நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதற்கு காரணம் வறுமையே. இதனாலும் கல்வி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மலையகத்தில் வாசிக்கக் கூடியவர்கள் இருந்தும் அவர்களுக்கு பத்திரிகைகள் போய்ச் சேராததால் அவர்கள் பத்திரிகை வாசித்து அறியமுடியவில்லை. இன்றைய நிலையில் பத்திரிகை ஊடாக நிறைய விசயங்களை அறிய முடிகிறது. இலங்கை

9பக்கம் பார்க்க

# "துரோகிகள்"

ஒருவரின் வாக்குரிமையை அவர் நினைத்தபடி விரும்பியபடி பிரயோகிப்பது துரோகம் என்று இ.தொ.கா. தலைவர் தொண்டமான் கொழும்பு கொச்சிக்கடையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். அதாவது இந்திய வம்சாவளி மக்கள் பேரணிக்கு வாக்களிக்காதவர்களை தொண்டமான் துரோகி என்கிறார்.

அதேபோன்று தொ.தே. சங்கத்தின் தலைவர் டி. அய்யாத்துரையும் மேற்படி பேரணியை இனவாத அமைப்பென்று கூறுபவர்களை துரோகி என்று அடையாளம் கண்டுள்ளார்.

வடக்கு கிழக்கு அரசியலில் மாற்றுக் கருத்துள்ளவர்கள் 'துரோகிகள்' என்று அழைக்கப்பட்டதையும் அவர்கள் அழிக்கப்பட்டதையும்

6பக்கம் பார்க்க

# நாலு நடக்கும் உலகிலே

## ராமையாணம் : மூக்குடைபட்ட படலம்

செங்கொடிச் சங்கத்தை அதன் தலைவர் ராமையா முற்போக்கு அரசியலிருந்து வனவாசத்துக்கு அனுப்பினாலும் தன்னை மட்டும் மிகவும் முன்னேற்றியுள்ளார். அண்மையில், ஒரு தொழிற்சங்க வழக்கு விசாரணை மன்றில் அவர் ஒரு முன்னாள் இடதுசாரி வழக்கறிஞரைக் கண்டார். அந்த வழக்கறிஞர் முதலாளி தரப்பில் ஒரு பெரிய தொழிற்சங்கத்திற்கு எதிராக வழக்காட வந்திருந்தார். செங்கொடிச் சங்கத் தலைவர் படு உற்சாகமாக அவரை மட்டம் தட்டும் நோக்கத்துடன் வலியப் பேச்சுக் கொடுத்தார். "இப்போது தோழர் முதலாளிகட்காக வழக்குப் பேச வந்திருக்கிறீரா?" என்று ஏளனமாகக் கேட்டார். வழக்கறிஞர் "தொழிலாளிகளை அயல்நாட்டு முதலாளிகட்குக் காட்டிக் கொடுக்கிற உம் போன்ற தொழிற்சங்கவாதிக்காக வழக்குப் பேசுவதைவிட உள்ளூர் முதலாளிக்கு வழக்கு பேசுவது உயர்வானது" என்று சூடாகவே திருப்பிக் கொடுத்தார். செங்கொடிச் சங்கக்காரர் மறுபேச்சில்லாமல் மெல்ல நழுவினார்.

## தமிழரும் ரூபவாஹினியும்

ரூபவாஹினியில் தமிழ் மக்களுக்குப் பயனுள்ளவை என அதிகம் கிடைப்பதில்லை. அரசாங்கப் பிரசாரத்துக்கு மட்டுமே ரூபவாஹினி தமிழில் செயற்படுகிறது என்பது பெருமளவும் உண்மை. அதைக்கூட மாற்றாந்தாய் மனநிலையுடன்தான் செய்கிறது. அயல்மொழிப் படங்களுக்கு சிங்கள உரை அல்லது எழுத்துத் துணை உண்டு. தமிழர்கட்கு எதுவும் இல்லை.

இப்போது டிஸ்கவரி என்ற புதிய தொலைக்காட்சி நிறுவனத்தின் அறிவியல், இயற்கை, வரலாற்று நிகழ்ச்சிகளைக்காட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவை விரைவில் சிங்களத்தில் டப் செய்யப்படும்.

தமிழில்?

தமிழையும் அரச கரும மொழியாக்கியதற்கு மேலாக தமிழருக்கு வேறென்ன வேண்டும்?

## ஆங்கிலமே அதிகாரத்தின் மொழி

1977ல் யூ.என்.பி. அதிகாரம் பெற்ற பின்பு சிங்கள இனவாதம் மேலும் உக்கிரமான போதும் ஆங்கில மொழி ஆதிக்கம் அதனுடன் சேர்ந்தே வளர்ந்தது. இன்று தமிழ் மக்களைப் புண்படுத்தும் நோக்கத்திற்காகச் சிங்களம் அரச கரும மொழியாகப் பயன்படும் அளவுக்குச் சாதாரண சிங்கள மக்களுக்கு ஆளுமையை வழங்கும் மொழியாக இயங்குகிறதா என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

இப்போது ஆங்கிலத்தில் தகுதி பெறாத எவருக்கும் பல்கலைக்கழக உயர்கல்வி இல்லை என்ற கொள்கைக்கான பிரசாரம் வலுவாகி வருகிறது. சிங்களமும், தமிழும் உயர்கல்வி மொழிகளாக மேலும் வளர்வதற்கு அண்மையில் எதுவுமே செய்யப்படாததோடு, அவை தேய்வதற்கான சூழலை உத்தரவாதப்படுத்தவே இப்புதிய கொள்கை உதவும். ஆங்கிலம் படித்த ஒரு அதிகாரிகள் வர்க்கமே தரகு முதலாளிகள் சார்பிலும் பன்நாட்டு நிறுவனங்கள் சார்பிலும் இனி நாட்டை ஆளுமா?

## ஒரு என்.ஜி.ஓ.வின் அஸ்தமனம்

ஐ.ஏ. என்ற இன்றநஷனல் அலேட் (சர்வதேச விழிப்புணர்வு) என்ற பேரில் இயங்கி வந்த என்.ஜி.ஓ. நாடுகளில் பிணக்கைத் தீர்ப்பதற்கான ஒரு அமைப்பாகத் தன்னை காட்டிக் கொண்டது. இந்த அமைப்பு பிரேமதாசாவுக்கு சாதகமான முறையில் 1987-89 காலகட்ட வன்முறை பற்றிய ஒரு அறிக்கையை வெளியிட்டதைப் பலரும் அறியமாட்டார்கள். தமிழ் மக்களது உரிமைகட்குப் பாதகமான ஒரு அறிக்கையும் இவர்களது ஆதரவில் நெவில் ஜயவீரவால் தயாரிக்கப்பட்டு கடும் ஆட்சேபனைகளின் பின் கைவிடப்பட்டது. இதன் தலைவர் குமார் ரூபசிங்ஹ 1980களினின்று அயல் நாடுகளில் வாழ்பவரும் முன்பு ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் இருந்த ஜனவேகய குழுவின் முக்கியஸ்தரும் ஆவார். திபெத் விடயத்தில் தலாய்லாமாவுக்காகப் பிரசாரம் செய்வதும் ஐ.ஏ. யின் திருப்பணிகளில் ஒன்று. இப்போது தெரியாத்தனமாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒரு நிலைமைக்கு ஐ.ஏ. ஆளாகி விட்டது. விடுதலைப் புலிகளுக்குப் பாதகமாக அறிக்கை தயாரித்த ஒரு ஊழியரைப் பதவி நீக்கியதன் காரணமாக எழுந்த பூசல், குமார் ரூபசிங்ஹ பதவி விலகவும் ஐ.ஏ. யின் இலங்கைக் கிளை மூடப்படவும் செய்துவிட்டது. மூடுதலுக்காக மும்முரமாகச் செயல்பட்டோர் சிங்களப் பேரினவாதிகள் என்பது வருந்தத்தக்க உண்மை. ஆயினும் உலக நாடுகளின் உள்விவகாரங்களில் தமது பணபலத்தைக் கொண்டு குறுக்கிடும் என்.ஜி.ஓக்கள் விரட்டப்படுவது நல்ல காரியமே. ஐ.ஏ. யுடைய அளவுக்கு மட்டுமன்றி அதைவிட மோசமாக நாட்டு மக்களைச் சீரழித்து வரும் மற்ற என்.ஜி.ஓக்களை நாம் என்ன செய்யப் போகிறோம்?

## என்.ஜி.ஓ. இல்லாமல் முடியுமா?

மலையக மக்களை இ.தொ.கா. பலகாலம் ஏமாற்றியது. சிலகாலமாக ம.ம.மு ஏமாற்றப் பார்த்தது. செங்கொடிச்சங்கமும் தே.தொ.காங்கிரஸும் 1977க்குப் பின் மும்முரமாக அந்த முயற்சியில் இறங்கி விட்டன. ஆனால் மலையக மக்கள் விழித்துக் கொள்ளத் தொடங்கி விட்டனர். எனவே ஏமாற்றுக்காரர்கள் ஒரு கூட்டணி அமைத்துக் கொள்ளும்படி ஆகிவிட்டது.

சிறிது விழித்துவிட்ட மக்களை ஏமாற்றுவது என்றால் அது லேசில்லை. அதற்கு நிபுணர்கள் தேவை. எனவே அந்தத் தொழிலில் சர்வதேச நிபுணத்துவமும் வேண்டிய பணமும் கொண்ட என்.ஜி.ஓக்களுக்கும் தேவை ஏற்பட்டுவிட்டது. இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்பது மலையக மக்களை இளிச்ச வாயர்கள் என நினைப்பவர்களது கூட்டணி என்ற உண்மை என்.ஜி.ஓ உறவால் மேலும் முழுமை பெறுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


# தமிழ்க் கட்சிகளின் இயலாமை!

அண்மையில் இடம்பெற்ற சார்க் மாநாட்டில் கலந்த கொள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கை வந்திருந்தார். அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர் கூட்டணியினர், தொண்டமான் உட்பட தமிழ்க் கட்சிகள் தத்தமது முறையீடுகளை இந்தியப் பிரதமரிடம் எடுத்துக் கூற முற்பட்டனர். தமிழர் கூட்டணியினரும் தொண்டமான் தலைமையிலான பேரணியினரும் தனித்தனியே இந்தியப் பிரதமரைச் சந்தித்து தத்தமது முறையீட்டைத் தெரிவித்து தமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டதாக விளம்பரப்படுத்திக் கொண்டனர். அதற்கும் முடியாமல் போன ஏனைய தமிழ்க் கட்சிகள் விருந்துக்குப் போன இடத்தில் கண்டு பேசியதாக அறிக்கை விட்டன. எல்லோருடைய முறையீடுகளையும் காதால் கேட்ட வாஜ்பாய் அவர்கள் வாயால் எந்தவித பதிலையும் கூறவில்லை. மௌனம் கடைப்பிடித்தார் என்பதும் செய்தி. அந்த மௌனத்திலும் அர்த்தம் கண்டு பிடித்து அதனால் ஆறுதல் பெற்ற தமிழ்க் கட்சிகளும் உண்டு.

இவர்கள் எல்லோரும் இந்தியப் பிரதமருக்கு விளக்க முற்பட்டவை எதுவும் புதிய விடயங்கள் அல்ல. இலங்கையின் இனப்பிரச்சனை பற்றியும் அதனைத் தீர்த்து வைக்க இந்தியா எடுக்க வேண்டிய பங்கும் பணியும் பற்றியதாகும். அதேபோன்று மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை இந்திய வம்சாவழி மக்கள் பிரச்சனை என அடைமொழி வைத்து இந்தியப் பிரதமருக்கு விளக்கப்பட்டிருக்கிறது. இவர்களது சந்திப்பையும் எடுத்துரைப்புகளையும் வெறும் பம்மாத்து காட்டல்கள் என்றே கூறுதல் பொருந்தும். ஏனெனில் இவர்கள் அனைவரும் நாளாந்தம் இந்த நாட்டில் செய்துவரும் செயல்கள் யாவும் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மக்கள் விரோதப் போக்குகளுக்குத் துணை செய்பவைகளேயாகும். இனப்பிரச்சனையின் தீர்வு எனக் கூறிக்கொண்டே யுத்தத்தை நடாத்திச் செல்லும் அரசாங்கத்தின் யுத்தக் கொள்கைக்கு தமிழ் கட்சிகள் ஏதோவொவ்வொரு விதத்திலும் தத்தமது நிலையிலும் ஆதரவு தெரிவித்தே வருகின்றன. இதனைத் தமது பாராளுமன்றத்திற்கு உள்ளான செயல்பாட்டிலும் அதற்கு வெளிவாரியான நடைமுறைகளாலும் செய்து வருகின்றன. அதேபோன்று இந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்து கொண்டு மலையக மக்களின் பெயரால் ஆதாயங்களை அனுபவித்து வரும் தொண்டமானும் அவரது கட்சியனரும் உரியவாறு கோரிக்கை வைத்துப் போராட சக்தியற்ற இயலாமையை மறைக்கவும் மலையக மக்களை ஏமாற்றவும் இந்தியப் பிரதமரிடம் முறையீடு தெரிவிப்பது மிகப் பெரிய ஏமாற்று என்பதை எவரும் புரிந்து கொள்வார்கள்.

இந்தியாவிடம் கோரிக்கை விடுப்பது இதுதான் முதல்தடவையல்ல. ஏற்கனவே இந்தத் தமிழ் கட்சிகள் இந்தியாவை வருந்தி அழைத்து வந்து தமிழ் தேசிய இனத்திற்கு எதனைப் பெற்றுக் கொடுத்தன என்பது எவரும் அறியாத ஒன்று அல்ல. இந்தியா அன்று தன்நலன் பேணிக்கொண்டதே தவிர நியாயமாக நடந்து கொள்ளவில்லை. இனப்பிரச்சனையைப் பயன்படுத்தி தனது பிராந்திய நலனுக்காக செயல்பட்டதே தவிர தமிழ் மக்களுக்கு துன்ப துயரங்களையே வழங்கிச் சென்றது என்பதை தமிழ் கட்சிகள் மறந்தாலும் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை. அதேபோன்று மலையக மக்களுக்கு இன்றுவரை இந்தியா எதையும் செய்து கொள்ளவில்லை. இந்தியாவிற்கு சென்ற மலையக மக்களைக் கூட மனிதாபிமானத்துடன் நடத்தாத இந்தியாவிடம் மலையக மக்கள் எதிர்பார்க்க எதுவுமே இல்லை. சகல வழிகளாலும் மலையக மக்களால் நிராகரிக்கப்பட்டு வரும் தொண்டமானுக்கு ஒரு "இன்றைய ஸ்பெசல்" தேவைப்படுகிறது. அதனையே இந்திய வம்சாவளிப் பேரணி என்ற பெயரில் விளம்பரம் செய்ய இந்தியப்பிரதமரின் சந்திப்பு ஒரு சந்தர்ப்பம் ஆகியது.

உண்மையாகவே நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் தமிழ்க் கட்சிகளுக்கு இருந்திருக்குமானால் இந்தியாவிடம் இரந்து நிற்பதைவிட பலபத்து விடயங்களை ஒன்றுபட்டு சாதித்திருக்க முடியும். அதற்குரிய கொள்கையும் அர்ப்பணிப்பு அரசியல் சிந்தையும் நேர்மையாகவே மக்களுக்குப் பணிபுரியும் பக்குவமும் தேவை. அடுத்த நூற்றாண்டில் கூட அவற்றை இவர்களிடம் தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது. தமிழ் மக்கள் தமக்குரிய மாற்று வழியைத் தேடுவதைத் தவிர வேறு மார்க்கமே இருக்க முடியாது.

--ஆசிரியர் குழு.

# சிங்கள ஆணைக்குழுவும் பேரினவாத வெறியும்

இந்த நூற்றாண்டு முடிவடைவதற்கு இன்னும் பதினாறு மாதங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அடுத்த நூற்றாண்டை எதிர்கொள்வதற்கு ஒவ்வொரு துறையிலும் திட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போன்று இந்த நூற்றாண்டு முழுவதும் தன்னை ஒரு கொடிய நச்சு விருட்சமாக வளர்த்துக் கொண்ட பௌத்த சிங்களப் பேரினவாதம் அடுத்த நூற்றாண்டிலும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள தனக்குரிய தயாரிப்புகளை செய்து வருகின்றது. அதனையே சிங்கள ஆணைக்குழுவின் கட்டம் கட்டமான அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை யானது தனியே இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு மட்டும் எதிரான ஒன்று அல்ல. அதற்கும் மேலால் வெறித்னமான பேரினவாத அடிப்படைகளைக் கொண்டதாக அது விளங்குகின்றது. இப் பௌத்த சிங்கள பேரினவாதத்தை இன்று முழு மூச்சாக முன்னெடுப்பதில் முப்பெரும் சக்திகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இணைந்திருப்பதை தெளிவாக அடையாளம் காணமுடிகிறது. ஒன்று பௌத்த மதபீடங்களும் அதன் தலைமை மகாநாயக்கர்கள் என்போர். இரண்டாவது பௌத்த சிங்கள பேரினவாத அறிவு ஜீவிகள். மூன்றாவது ஆளும் வர்க்க அரசியல் அதிகார சக்திகள்.

இம்மூன்று சக்திகளுக்கும் இடையிலான இணைப்பும் பிணைப்பும் இந்த நூற்றாண்டு முழுவதும் வளர் திசையிலேயே இருந்து வந்துள்ளது. அதன் ஒவ்வொரு படி நிலை வளர்ச்சிக் கட்டம் ஒவ்வொன்றும் நாட்டின் ஏனைய தேசிய இனங்கள் மீதான உரிமை மறுப்புகளாகவும் அடக்கு முறைகளாகவும் இருந்து வந்துள்ளன. இவற்றுக்கு இப்பேரினவாத சக்திகள் கொடுத்த வியாக்கியானம் பௌத்தத்தையும் சிங்கள இனத்தையும் பாதுகாப்பது என்பதாகும்.

இந்நாட்டின் சிங்கள இனம் எண்ணிக்கையில் பெரும் பான்மையானதாகவும் பௌத்த மதம் அவர்களது மதமாக மிக நீண்ட காலம் தொட்டு இருந்து வருவதும் இப்பேரினவாதிகளின் தர்க்கக்கங்களது மையப் புள்ளியாக இருக்கின்றது. அத்துடன் உலகில் வேறு எங்குமே சிங்கள இனமோ, மொழியோ இல்லாதிருப்பதும் அதேவேளை அயல்நாடான இந்தியாவில் தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்வதும் அவர்கள் மத்தியில் இருந்த பண்டைய படையெடுப்புக்கள் இடம்பெற்ற வரலாறுகளும் பேரின நியாயப் பாடுகளுக்கான காரணங்களாகின. இவற்றை பல்வகைக் கட்டுக்கதைகளாக இட்டுக் கட்டுவதிலும் அவற்றுக்கு இன, மத அடையாளத்தை வழங்கி அழுத்துவதிலும் பௌத்த மத பீடங்களும் அதன் தலைமை நாயக்க தேரர்களும் எப்போதும் முன்னணியில் இருந்து வந்துள்ளனர். அவை பௌத்த இலக்கியங்கள் நூல்கள் என்பனவற்றிலும் உட்புகுந்து கொண்டன. இத்தகைய பௌத்த மத பீடங்களுக்கு ஆளும் வர்க்க ஆதரவு இருந்து வந்துள்ளதுடன் இப்பீடங்களே மக்கள் மத்தியில் ஆதிக்க நிலை வகித்தும் வந்துள்ளன. இந்நிலை உலகின் ஏனைய மத நிறுவனங்கள் வகித்து வந்த நிலைப்பாடுகளுடன் அதிகளவிற்கு ஒத்தனவாக இருந்த தன்மைகளைக் கொண்டிருந்தன. அதன் தொடர்ச்சி தான் இந்த நூற்றாண்டிலும் பௌத்தமத பீடங்களால் முன்னெடுக்கப்பட்டது.

இத்தகைய பீடங்களுடனும் பீடாதிபதிகளுடனும் சிங்கள இனவாத அறிவுஜீவிகள் என்போர் காலத்திற்குக் காலம் அக்கம் பக்கமாக இருந்து பௌத்த சிங்கள இனவாதத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள். இன்று பௌத்த காங்கிரஸ் நிறுவனத்தில் அணிசேர்ந்து நிற்கும் அறிவு ஜீவிகளில் முன்னாள் நீதியரசர்கள் தொட்டு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மட்டுமன்றி அண்மைக்காலங்களில் ஓய்வுபெற்ற இராணுவ உயர் அதிகாரிகளும் இணைந்து காணப்படுகின்றனர். இத்தகையோரது எண்ணங்களில் இருந்து பிறந்ததே பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியாகும். இது பதவியில் இருக்கும் இராணுவ அதிகாரிகளின் பங்குபற்றலுடன் விரிவாக்கப்பட்டு வருகின்றது. சோபித தேரர் போன்ற தீவிரமான பேரினவாதப் பிரசாரகர்கள் இருப்பது புதுமையான ஒன்று அல்ல. ஆனால் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வழி காட்டக் கூடிய அறிவு ஜீவிகள் என்போரில் ஒரு பகுதியினர் பேரினவாதத்தில் மூழ்கி நிற்பதானது நாடு உய்விற்கான பாதையில் செல்லும் அறிகுறியினை அறவே இல்லாதொழிக்கும் ஒன்றாகவே உள்ளது.

> அந்நியராட்சியில் மதம்மாறிச் சலுகைகளை அநுபவித்து தமது வர்க்க வசதிகளைப் பாதுகாத்துக் கொண்ட சக்திகள் அந்நியராட்சிக்குப் பின்னான காலத்தில் தீவிரமான பௌத்த சிங்கள பாதுகாப்பாளர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டமை ஒரு வரலாற்று விநோதம் என்றே கூறுதல் வேண்டும்.

மூன்றாவதாகக் காணப்படும் ஆளும் அதிகார அரசியல் சக்திகள் மேற்கூறிய இரண்டு பிரிவினருடனும் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் கைகோர்த்து அரசியலை ஆண்டு வந்திருக்கின்றனர். இலங்கையில் பௌத்த மதபீடங்களின் ஆலோசனையை அல்லது அவற்றின் கட்டளைகளை மீறிச் செயல்பட்ட எந்தவொரு ஆளும் அரசியல் சக்தியையும் சுட்டிக்காட்ட இயலாது. அந்நியர்களுக்கு நாட்டை ஒப்படைப்பதிலும் அந்நியராட்சியில் மதம் மாறிச் சலுகைகளை அநுபவித்து தமது வர்க்க வசதிகளைப் பாதுகாத்துக் கொண்ட சக்திகள் அந்நியராட்சிக்குப் பின்னான காலத்தில் தீவிரமான பௌத்த சிங்கள பாதுகாப்பாளர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டமை ஒரு வரலாற்று விநோதம் என்றே கூறுதல் வேண்டும். இதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா குடும்பங்களின்

11ம் பக்கம் பார்க்க

## ஒரு விடுப்புக் கதை

"பேரில் யாழ்ப்பாணம் உண்டு. பேர்வழிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை.
ஆசிரியர்கள் நடத்துவதாகப் பேச்சு. யாரும் ஆசிரியர்கள் இல்லை.
பல்கலைக்கழகம் என்று பேர். யாரும் பல்கலைக்கழகத்தில் இல்லை.
மனித உரிமை என்றும் உண்டு. சிலபேர் மீறுவது பற்றி மட்டுமே பேசுவார்.
இவர்கள் யார்?"
இதென்ன பேய் விடுகதை! எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம்தானே!

நன்றி - நூலகத்திட்டம்



அந்தக் காலம் முடிவடைந்து விட்டது!

# தொண்டமான் ஓய்வு எடுக்க வேண்டும்!

கம்பளிக்கு நூறு ரூபாய் கறுப்பு கம்பளிக்கு நூறுரூபாய் கற்பூரத்துக்கு 3 ரூபாய் சூடத்துக்கு 3 ரூபாய் எலுமிச்சைக்கு 3 ரூபாய் தேசிக்காய்க்கு 3 ரூபாய் என்று கூறி தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து ஒரு பொருளுக்கு இரண்டு தடவை காசு வசூலித்த காலம் ஒன்றிருந்தது என்று கேள்விப்படுகிறோம். தொலைபேசி எண்ணை சுழற்றாமலே தோட்டத்துரைமாரை தொழிற்சங்க பிரதிநிதிகள் கண்டபடி திட்டுவதும் ஒரு காலத்தில் நடந்ததாம்.

அவற்றைவிட மிகவும் மோசமான பம்மாத்தொன்றை தொண்டமானும் அவரின் தலைமையில் அணி திரண்டுள்ள சில தொழிற்சங்க வாதிகளும் கடந்த வாரம் செய்துள்ளனர். சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த இந்தியப்பிரதமர் வாஜ்பேயை சந்தித்து பிச்சை கேட்கப்பட்டதை வேறென்னவென்று விளங்கிக் கொள்ள முடியும்.

தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சுக்கு நிதி வேண்டும். கொட்டகலை வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் வேண்டும். பத்தனை சிறிபாத கல்லூரியை அபிவிருத்தி செய்ய உதவி வேண்டும். இந்திய வம்சாவளி மக்களின் கலாசாரத்தை வளர்க்க உதவி வேண்டும். என்றவாறு பல வேண்டுகோள்களை தொண்டமான் இந்தியப் பிரதமரிடம் விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோள்களை பார்க்கின்றபோது தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவின் அமைச்சரவையில் அமைச்சரா? மலையக மக்கள் இலங்கை அரசின் மக்களா? அல்லது இந்திய அரசின் மக்களா என்றே கேள்வி எழுப்பப்படுகிறது.

தோட்டப்புற உள்ளகக்கட்டமைப்பு என்றொரு அமைச்சை ஏற்படுத்திக் கொடுத்ததை பெரிய கொம்பென்று கதைத்துத் திரிந்தவர்கள் அதனை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் பணம் தரவில்லை என்று இந்தியப்பிரதமரிடம் முறையிட்டு என்ன பயன்? பேருக்கு ஆடடித்து பிள்ளை கையில் எதையோ கொடுத்த கதையாகத்தான் தோட்டப்புற உள்ளக கட்டமைப்பு அமைச்சும் தொண்டமான் கையில் கொடுக்கப்பட்டதாக இருந்தால் அதனைப் பற்றி புகழ்ந்து பேசுவானேன்?

1977ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 21 வருடங்களாக அமைச்சராக இருந்து வரும் தொண்டமான் அவருக்கு அருகில் அமர்ந்திருந்த கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்காமல் மலையக கல்வியை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும்? சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்காமல் மலையக சுகாதாரத்தை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும்.

கொட்டகலை, வட்டவளை ஆகிய வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய ஐ.தே.கட்சி காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டமையும், அவற்றின் அபிவிருத்தி வேலை தொடங்கப்பட்டு இடையில் கைவிடப்பட்டு அந்நிதி நுவரெலியா கினிகத்தேனை வைத்தியசாலைகளுக்கு திருப்பப்பட்டமையை அறியவில்லையா? அன்றைய அமைச்சராக இருந்த ரேணுகா ஹேரத் மேற்படி கைங்கரியத்தை செய்தார் என்பதையும் அறியமுடியவில்லையா?

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தோட்ட சுகாதார சேவை மத்திய சுகாதார சேவையுடன் இணைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்தார். அதனை அமைச்சர் தொண்டமானும், பிரதியமைச்சர் சந்திரசேகரனும் ஒரேயடியாக புகழ்ந்தனர். மேற்படி சுகாதார அமைச்சர் தினமும் வைத்தியசாலைகளில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் கொட்டகலை வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் இல்லையென்று தொண்டமான் வாஜ்பேயிடம் முறையிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கை மத்திய கல்வி அமைச்சுக்கும் மாகாண கல்வி அமைச்சுக்கும் பொறுப்பான மலையக கல்வி அபிவிருத்தி பற்றி தொண்டமான் இந்தியப் பிரதமரிடம் கதைத்துள்ளார்.

மக்களினால் ஓரங்கட்டப்பட்ட நிலையிலும் கூட மலையக மக்களின் அபிவிருத்திக்காக நேர்மையான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையுமே எடுக்காது மீண்டும் மக்களை ஏமாற்றி ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளிலேயே தொண்டமான் ஈடுபட்டு வருகிறார். இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சனைகள் பற்றி இந்திய பிரதமரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாக காட்டி செல்வாக்கை பெறமுடியும் என்று அவர் நினைத்து செயல்பட்டிருக்கிறார்.

இந்தியப் பிரதமரிடம் கதைப்பதால் எமக்கு எதுவும் நடக்கப் போவதில்லை என்பதே உண்மை. எனினும் சில முக்கிய விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமானது. அதில் இன்னும் தீர்க்கப்படாமலிருக்கும் பிரசாவுரிமை பிரச்சனை முக்கியம் பெற்றிருக்கலாம். அதைவிட்டு விட்டு எங்கள் வீட்டில் உப்பு இல்லை, கொச்சிக்காய் இல்லை என்று வாஜ்பேயிடம் கூறுவது யாரை ஏமாற்றுவதற்காக?

அயல் நாடுகள் என்ற வகையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இருக்கும் தொடர்பால் புரிந்துணர்வால் பரஸ்பரம் செய்யப்படும் உதவிகள், பரிவர்த்தனைகள் என்பவற்றினால் மலையக மக்களை நிமிர்த்திவிட முடியாது. அப்படி காட்ட முயற்சிப்பது அம்மக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும்.

மலையக மக்கள் இந்த நாட்டு மக்கள் அவர்களின் உரிமைகள் இந்நாட்டு அரசாங்கத்தினாலேயே உறுதிசெய்யப்பட வேண்டும். அவர்களின் உரிமைகளை இந்நாட்டு அரசாங்கம் உறுதி செய்ய முடியாதிருக்கிறது. என்பதை உணர்ந்தால் ஏற்ற அரசாங்கத்தை மாற்றியமைக்க வேண்டும். மாற்றியமைக்க துணிவோ விருப்பமோ இல்லாவிட்டால் மக்களை வைத்துக் கொண்டு அடிமை வியாபாரம் செய்யாமல் அரசியலை விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இன்றைய நிலையில் எதையுமே செய்ய முடியாது என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள தொண்டமான் உட்பட எல்லா தொழிற்சங்கத் தலைவர்களும் அரசியலிருந்து ஓய்வெடுத்துக் கொள்வதே சிறந்த தெரிவாகும்.

**ம. அழகேசன்**

# கேளுங்கள் கிடைக்குமா?

கேளுங்கள் தரப்படும் கோரிக்கை நிறைவுறும்
போடுங்கள் வோட்டை என்றார் - எனக்கே
போடுங்கள் வோட்டை என்றார் - தொண்டா
(கேளுங்கள் தரப்படும்)

கேட்டது கெடைக்கலே கெஞ்சியும் நடக்கலே
போட்டேதும் பயனுமில்லே - தொண்டா
தோட்டகத்தே வரவுமில்லே - தொண்டா
(கேளுங்கள் தரப்படும்)

மலைய[illegible] இயக்கத்தை நம்பி
வோட்டை அளித்தாரே - சிலபேர்
வோட்டை அளித்தாரே

மந்திரியாகி சந்திர சேகரன்
மொளகாய் அரைச்சாரே - தலைமேல்
மொளகாய் அரைச்சாரே - இப்போ
(கேளுங்கள் தரப்படும்)

போரிட வந்த செங்கொடிச்சங்க
பாதையை தெசை திருப்பி - நல்ல
பாதையை தெசை திருப்பி

சோவியத் கட்சி கூட்டத்தில் போய்
காசக்கு வித்தானே - ராமன்
காட்டிக் குடுத்தானே - வந்து
(கேளுங்கள் தரப்படும்)

வீ.கே. வெள்ளையன் சங்கத்தை போய்
துரோகிகள் பிடிச்சாரே - மக்கள்
துரோகிகள் பிடிச்சாரே

யூ.என்.பி யோட கூட்டணி வெச்சி
பேரைக் கெடுத்தாரே - பழைய
பேரைக் கெடுத்தாரே
(கேளுங்கள் தரப்படும்)

காசை இறைக்கிற என்.ஜீ.ஓங்க
கூட்டமும் வந்திடுச்சே - தேர்தல்
கேக்கவும் துணிஞ்சிடுச்சே

ஆசை காட்டி மோசங்கள் செய்யும்
பேர்களை சேர்ந்திடுச்சே - கெட்ட
பேர்களை சேர்த்திடுச்சே - அவ்னும்
(கேளுங்கள் தரப்படும்)

பச்சையும் வேணாம் நீலமும் வேணாம்
புதிதாய் ஒரு சக்தி - நமக்கே
புதிதாய் ஒரு சக்தி
புதிய இடதுசாரி முன்னணி
பக்கமாய் நிற்போமே - நாமும்
பலம் பெற உழைப்போமே

கேட்டதும் நடக்குமா கோரினாக் கெடைக்குமா
போராட வேணும் என்றார் - மாஓ
போராட வேணும் என்றார்
தோட்டத்து ஜனங்களே சேருங்க அணியிலே
போராடி உரிமை கொள்ள - நம்ம
ஞாயங்கள் உலகை வெல்ல - ஆமா
(கேட்டதும் நடக்குமா)

(கேளுங்கள் தரப்படும் என்ற கிறிஸ்தவ கீத மெட்டு)

# மலையகத்தில் என்.ஜீ.ஓ. பெண்ணிய அரசியல்

பெண்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்க வெகுசன அமைப்புகளைக் கட்டியெழுப்புவதும் அரசியற் போராட்டங்களை நடத்துவதும் வரவேற்கத்தக்கது மட்டுமில்லை, அது ஊக்குவிக்கப்பட வேண்டியதும் ஆகும். எல்லாப் பெண்களையும் அணைத்துச் செல்லக்கூடிய ஒரு பெண்கள் அமைப்பு இருக்க முடியாது என்பதை இந்தியாவின் பல மாநிலங்களினதும் அனுபவம் காட்டுகிறது. சாதி, தேசியஇனம் போன்ற முரண்பாடுகளைக் கடந்து தங்களால் இயங்க இயலாதென்று பல பெண்கள் அமைப்புக்கள் காட்டியுள்ளன. இவை எல்லாவற்றிலும் மேலாக வர்க்க நலன்கள் அடிப்படையானவை. எனவே ஒடுக்கப்பட்ட வர்க்கத்துப் பெண்கள் பால் அடிப்படையிலும் வர்க்க அடிப்படையிலும் போராட இணைவதே பெண்ணுரிமைக்கான வலிய ஒரு அணியை உருவாக்க உதவும்.

இப்போது என்.ஜீ.ஓக்கள் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கும் இயக்கங்களாக வேடம் அணிந்து வருகின்றன. இவை எல்லாமே அயலார் பணத்தில் நடத்தப் படுகின்றவை. இவற்றுக்கு ஏராளமான அயல்நாட்டுப்பணம் அடையாளம் தெரியாத இடங்களிலிருந்து வருகிறது. இதை வைத்து தமது செல்வத்தையும் செல்வாக்கையும் வளர்த்துக் கொண்டவர்கள் பலர். இதுவும் போதாது என்று, அரசியலிலும் அதிகாரத்தைச் செலுத்தும் வேலைகள் தலைமறைவாக நடக்கின்றன. இதன் தொடர்ச்சியாக மலையகத்தில் ஒரு பெண்ணுரிமை என்.ஜீ.ஓ. கும்பல் இன்று தேர்தலில் நிற்கிறது.

மலையகத்தில் மிகவும் பின்தங்கிய அரசியல் வளர்ச்சிபெற்ற பகுதிகளில் உள்ளோர் மத்தியில் சமூக சேவை, கடன்வசதி என்று வேறெவரோ காசில் சிறிது தானம் வழங்கித் தாமும் அள்ளுகிறார்கள். அரசியல் நடத்த இறங்கியுள்ளார்கள். பணம் வழங்கும் எசமானர்களையும் இது அதிர வைத்திருக்கிறது. திரை மறைவிலிருந்து இயக்குகிறவர்கள் தமது வேடம் இப்படி லேசாகக் கலைவதை விரும்பமாட்டார்கள். எனவே என்.ஜீ.ஓ. தேர்தல் அரசியலில் வெகுகாலத்துக்கு தொடர முடியாது. மலையகத்தில் சிலரை ஏய்த்துப் பிடுங்குகிற வோட்டுக்களும் நீண்டகாலத்துக்கு உதவாது. ஆனாலும் குறுகிய காலத்தில் இவை மிகவும் தீமை செய்ய முடியும்.

பெண்ணியம், பெண்ணுரிமை என்று எடுத்ததற்கெல்லாம் அறிக்கை விடுகிற நமது பெண்கள் அமைப்புக்கள் பெண்ணுரிமை பேரால் நடத்துகிற இந்த மோசடிக் கும்பல் பற்றி ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுப்பார்களா? தொண்டமானால் மலையக மக்களை இனியும் ஏமாற்றி விற்க முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது. ஆகவே மலையக மக்கள் அயலார் காசைக் கொண்டு விலைக்கு வாங்கி விற்க இந்த தரகு வியாபாரிகள் முளைத்து விட்டார்கள். இவர்கள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கத் தவறுவோரும் இந்த மோசடிக்குத் துணை போவோர்தான்.

**மகேஸ்வரி சுப்பிரமணி**

நன்றி - நூலகத்திட்டம்



## அக்கம் பக்கம்

# காணாமல் போவது

"அம்மா, என்னுடைய பந்தைக் காணவில்லை, பூனையைக் காணவில்லை, பொம்மையைக் காணவில்லை"

இப்படி எல்லாம் குழந்தைகள் முறையிடுவதை நாம் கண்டிருக்கிறோம்.

"அப்பா, தாவாரத்தில் வைத்திருந்த கோடரியைக் காணவில்லை, கொக்கைத் தடியை காணவில்லை, குழைச்சத்தகத்தை காணவில்லை"

இப்படிப்பட்ட வசனங்களையும் நாம் கேட்டிருப்போம்.

"அய்யய்யோ, சுரை கழன்றுவிட்டது, தோட்டைக் காணவில்லை" என்று சில வேளைகளிலே சிலர் பதறுவதை நாம் பாத்திருக்கக் கூடும்.

இவ்வாறு காணாமற் போகிறவை பெரும்பாலும் உயிரில்லாத சடப்பொருள்கள் அல்லது பகுத்தறிவில்லாத அஃறிணைப் பண்டங்கள்.

ஆனால் உயர்திணைப் பொருள்களாகிய மனிதர்கள் காணாமற் போவது மிகவும் அபூர்வம். தொடர்பு சாதன வசதிகள் இல்லாத பழங்காலத்திலே கோபக்காரர்கள், புத்தி குறைந்தவர்களை வீடுகளை விட்டு ஓடிக் கண்டு பிடிக்கப்படாமல் மறைந்து போவதைக் கதைகளிலே நாம் படித்திருக்கிறோம். திருவிழாக் கூட்டத்திலே அல்லது சன நெரிசலிலே யாரும் இரண்டொருவர் (சிறுவர்கள்) காணாமற் போவது உண்டு.

ஆனால் ஒரு நாட்டு மக்களிலே ஒரு சாரார் ஐந்நூறு பேர், ஆயிரம் பேர், நானூறு பேர் என்று பெருந்தொகையிலே காணாமற் போவது புதுமையானது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்தேறுவது இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளிலே தான் சர்வ சாதாரணமாகி விட்டிருக்கிறது.

மனித விழுமியங்கள் பற்றிய விழிப்பு நம்மவர்களிடையே எவ்வளவு 'சிறப்பாகப்' பேணப்படுகிறது என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை.

மனித விழுமியம், மனித உரிமை, சனநாயகம், சமூகத்தொண்டு, சமயப் பண்பாடு, தரும நெறிமுறை என்றெல்லாம் பேச்சுக்கள் நடக்கின்றன. பிரசங்கங்கள் நடக்கின்றன. பிரசாரங்கள் நடக்கின்றன.

அறநெறிப் பாடசாலைகள் தன்னார்வத் தொண்டின் தனிச் சிறப்பைப் போதிக்கின்றன.

வானொலியிலும், தொலைக் காட்சியிலும் சான்றோர்களும், சாமிமாரும் தரும போதகர்களும் இடையீடின்றித் தொணதொணத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிணக்குகளைப் பேசித் தீர்ப்பது எவ்வாறு, முரண்பாடுகளைக் கையாளுவதற்கான உத்திகள் எவை எவை கலந்துரையாடல் மூலம் கருத்திணக்கம் காண்பது எப்படி என்றெல்லாம் ஆராய்ந்து அறிவுறுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர் கொள்வது எப்படி என்ற தந்திர உத்திகளைக் கண்டு பிடித்துக் கூடை கூடையாகக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள் அறிஞர் பெருமக்கள்.

எல்லாம் நல்லாய்த்தான் இருக்கிறது. இருந்தாலும் மனிதர்கள் காணாமற் போகிறார்களே! இது எப்படி?

எங்கள் அயலவர்கள், எங்கள் நண்பர்கள், எங்கள் தோழர்கள், எங்கள் உறவினர்கள், எங்கள் பிள்ளைகள் காணாமற் போகிறார்களே! இதன் இரகசியம் என்ன?

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏதோ அலுவலாகப் போன இளம்பிள்ளையை நாங்கள் இன்னும் காணவில்லையே! அவன் எங்கே? அவனை நாம் காண்போமா? எப்பொழுது காண்போம்?

ஒருநாள் இரவு வேளையிலே பத்து மணிக்கு வந்த வாகனம், எங்கள் சின்னஞ் சிறு ஒழுங்கையில் ஓடிவந்து ஐந்தாறு வீடுகள் தள்ளி நின்று சிறிது நேரஞ் சென்றபின் அழுகுரல் கேட்டதே! குளறக் குளற வாகனத்திலே பலவந்தமாக ஏற்றப்பட்ட பிறகு அந்தக் குமர்ப் பிள்ளை என்ன ஆனாள்?

பிறகொருநாள் சுற்றி வளைப்பின் போது விடாப்பிடியாகத் தொடர்ந்த தாயையும் தகப்பனையும் மடக்கித் திருப்பிவிட்ட அந்த மனிதர்கள் பிள்ளையை எங்கே கொண்டு போனார்கள்?

எத்தனை சாத்திரிமார்களிடம் எமது பெற்றோர்கள் சாத்திரம் கேட்டிருப்பார்கள்? எத்தனை பூசாரிமார் 'வாக்குக்' கூறியிருப்பார்கள்? வடக்குத் திக்கிலே தான் இருக்கிறார் அடுத்த புரட்டாதிக்குள் நிச்சயம் வருவார், பயம் வேண்டாம் என்ற சுவாமிகளின் வாக்குகளையே தஞ்சமாகக் கொண்டு தற்காலிக ஆறுதல் பெற்ற தாய் தகப்பன்மார் எத்தனை பேர்?

இவர்கள் செய்யாத நேர்த்திக் கடன்கள் உண்டா? பண்ணாத அருச்சனை வகைகள் உண்டா? செய்யாத திருப்பயணங்கள் உண்டா?

காணாத பிரமுகர்கள் உண்டா? சந்திக்காத அதிகாரிகள் உண்டா? சேராத சங்கங்கள் உண்டா? ஏறி இறங்காத படிகள் உண்டா?

நிரப்பாத படிவங்கள் உண்டா? நிற்காத கியூ வரிசைகள் உண்டா? பார்க்காத சட்டத்தரணிகள் உண்டா? கேட்காத வானொலிச் செய்திகள் உண்டா?

எத்தனை எத்தனை பகல்களாய் எங்கெங்கெல்லாம் இவர்கள் அலைந்தார்கள். தேவாலயங்கள் சிவாலயங்கள் எதையுமே மிச்சம் வைக்காமல் அவற்றின் முன்னால் உண்ணா விரதங்கள் இருந்தார்கள். ஊர்வலங்கள் ஏற்பாடு செய்தார்கள்.

கண்ட பலன்தான் என்ன? ஆராரோ அலுவலர்கள், அதிகாரிகள், தூதுவர்கள், கறுத்தவர்கள், வெளுத்தவர்கள், பொது நிறமானவர்கள், ஆண்கள் பெண்கள், தமிழ் தெரிந்தவர்கள்–தெரியாதவர்கள் வந்தார்கள், போனார்கள், விசாரணை விசாரணை என்று கேள்விகள் கேட்டு மறுமொழிகளை எழுதிக் கொண்டு போனார்கள்.

கண்ட மிச்சம் என்ன? காணாமற் போனவர்கள் திரும்பி வந்தார்களா?

ஆம் வந்தார்கள். எல்லாரும் அல்ல பத்துப் பேரில் ஒருவர் அல்லது இருவர் என்ற வீதத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சோக வரலாற்றுடன் திரும்பி வந்தார்கள்– பரிவுடன் கேட்கலாம், பரிதாபப் படலாம். தேறுதல் கூறலாம். வேறு என்ன செய்யலாம்? என்னவோ இவர்கள் திரும்பியாவது வந்தார்களே என்ற அளவில் ஆறுதல் கொள்ளலாம்.

ஆனால்....... வராதவர்கள்? காலகதியிலே திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கலாம்.

அப்படித்தான் உறவினர் பலரும் நம்பிக்கையுடன் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையிலே ஒரு திடுக்கிடும் செய்தி சொல்லவும் நாக் கூசுகிறது. எழுதவும் பேனை மறுக்கிறது. அது முழு உண்மையாய் இருக்குமோ? அப்படி இருக்கக் கூடாது என்று ஆதங்கப்படுகின்றன அன்பு நெஞ்சங்கள். சாத்தியப்பாடுகளை வாய்விட்டுப்பேச மனங்கள் மறுக்கின்றன.

முன்னேற்றம், நாகரிகம், பண்பாடு, தருமம், அகிம்சை, அன்பு, அருள், என்று ஓயாது பேசிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டிலே இப்படியும் சில செயற்பாடுகள். "பூரண ஞானம் பொலிந்த நன்னாடு, புத்த பிரான் அருள் பொங்கிய நாடு" என்று புலவன் ஒருவன் புகழ்ந்து பாடினான். அவன் பாடியது பாரதம் என்ற பழம் பெரு நாட்டை. உணர்ச்சிக் கிறுக்கின் உச்சியிலே நின்று தன்னுடைய பாணியிலே உயர்வு நவிற்சியாக அவன் பாடினான். அப்படிப் பாடுவது அவன் வழி. அவன் பாரதி.

பாரத நாட்டைப் பற்றி மட்டும் என்ன? எங்களுடைய இந்த நாட்டைக்கூட இதே பாணியிலே நாம் பாடலாம். பாட வேண்டும். பாடியும் இருக்கிறார்கள் பல புலவர்கள்.

இருந்தாலும் அவர் வரலாற்றைப் புறவயமாக நின்று சற்றே உற்றுப் பார்க்கும் போது அப்படி எல்லாம் பாடும் மனநிலை இப்போதைக்கு வருமா?

புதையுண்டு கிடக்கும் உண்மைகள் வெளிச்சத்துக்கு வரவர... அவைகளை எல்லாம் நாம் எப்படி எதிர் கொள்ளப் போகிறோம்?

அவலம், கவலை, கையாறு, அழுங்கல்.... இவற்றை எல்லாம் உணர்த்தும் ஒரு தொடர் தமிழில் உண்டு. 'பனையாலே விழுந்தவனை மாடு ஏறி மிதிச்சது போலே' என்று சொல்லுவார்கள். மாடு ஒரு தடவை மிதித்திருந்தால் சில வேளை பொருத்தமான வைத்தியம் செய்து ஒருவாறு குணப்படுத்திக் கொள்ளலாம்.

மிதிகள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து விழுந்து கொண்டிருந்தால்?

என்ன செய்வாய்?

# தமிழ் நாடகத்திற்கு கிடைத்த பரிசு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் ஜனாதிபதி விருதுக்கான இளைஞர் கலாசாரப் போட்டிகள் கடந்த ஆண்டுப் போட்டிகள் பல தடவை பின் போடப்பட்டு 97ம் ஆண்டுக்கான போட்டிகள் 98ம் ஆண்டு நடாத்தப்பட்டது. இதில் பங்கு கொண்ட நாடகம் "எத்தனை லட்சங்கள்" யாழ் பல்கலைக்கழகம் வவுனியா வளாக மாணவர்களால் வவுனியா மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது. தேசிய போட்டிக்கு பல சிரமங்களின் மத்தியில் வவுனியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்டது. என்ன பரிதாபம் வேறு மாவட்டங்களில் இருந்து நாடகங்கள் எதுவும் வராது போனது. ஆனாலும் இவர்களுடைய எத்தனை லட்சங்கள் மேடையில் போட்டிக்காக நடித்துக் காண்பிக்கப்பட்டது. மீண்டும் என்ன பரிதாபம் பாருங்கள் ஒரு நாடகம் பங்கு கொண்டதால் பரிசில்கள் வழங்க முடியாது எனத் தெரிவித்து விட்டனர். அப்படியானால் ஏன் மேடையில் நடிக்க வைத்துப் பார்த்தனரோ? புரியவில்லை.

இளைஞர்களுக்காக சேவையாற்றுகின்றவர்களுக்கு முதலில் தெரியும் தானே ஒரு நாடகம் தான் வந்துள்ளது என்று. அப்படியானால் மேடையில் நாடகத்தை கண்டு ரசிக்க விரும்பித்தான் நடுவர்களும் சேவையாற்றுகிறவர்களும் இருந்திருப்பர். நடுவர்களுக்கான போக வேண்டியவை போய்ச் சேர்ந்திருக்கும். வவுனியாவில் இருந்து நாடகம் கொண்டு சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் நிலை? இதுதான் தே.இ.சே. மன்றத்தின் சேவைமனப்பான்மை. இளைஞர்களுக்கு சேவையாற்றுகிறவர்களா அல்லது இளைஞர் சேவையின் பெயரால் தங்களை வளர்த்துக் கொள்கின்றனரா? இந்தவகை இளைஞர் சேவைகளை இளைஞர்கள் புரிந்து கொண்டால் போதுமானதாகும்.

## ஊரான் ஊரான் தேசத்துலே

ஊரான் ஊரான் தேசத்துலே
இருந்து வந்தானாம் என் ஜீ ஓ
காசுபணம் ரொம்ப கொண்டு வந்து
கந்தோரு போட்டானாம் என் ஜீ ஓ
என் ஜீ ஓ பணம் வெள்ளி டொலர்
வெள்ளி டொலருக்கு ஆசெப்பட்டு
கள்ளங்கள் செய்வியோ மச்சானே

கம்மூனிஸ்ட் காரனெ திட்டு இன்னு
காசுங் குடுப்பானே என் ஜீ ஓ
நம்மூரு மக்களெத் தின்னுப்பிட்டு
நாட்டைக் கெடுப்பானே என் ஜீ ஓ
(என் ஜீ ஓ பணம்....)

மெத்தப் படிச்சவன் போலே வந்து
தத்துவம் சொல்லுவான் என் ஜீ ஓ
சொத்துப் படச்சவன் சொல்லுப்படி
சூதுகள் பண்ணுவான் என் ஜீ ஓ
(என் ஜீ ஓ பணம்....).

ஒத்துமையோடெ சேந்தவுங்க
குத்துப்படச் செய்வான் என் ஜீ ஓ
புத்தியோடே ஜனம் போரிடும்னா
பூசல் வெளைப்பானாம் என் ஜீ ஓ
(என் ஜீ ஓ பணம்....)


சொந்த பலத்திலே தங்கி நின்னா
சோத்துல மண் அள்ளிப் போட்டுடுவான்
கொஞ்சம் அசந்தாப் போதும் மச்சான்
கொண்டோடி போவானாம் என் ஜீ ஓ
(என் ஜீ ஓ பணம்....)
(ஊரான் ஊரான்....)

நன்றி - நூலகத்திட்டம்



# சூரியகந்த முதல் செம்மணி வரை......!

--விதுரன்--



அரசியல் காரணங்களுக்காக மனிதர்கள் காணாமற் போக்கப் படுவது இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த பத்தாண்டுக் கால இடைவெளியில் ஒரு முக்கியமான அரச அடக்குமுறையாகியுள்ளது. 1958ம் ஆண்டு இலங்கையின் முதல் அரசியற் படுகொலை நடந்தது. 1970 களில் யாழ் மேயர் துரையப்பாவின் கொலையை அடுத்து வன்முறை மிரட்டல் அரசியல் வடக்கில் வேகமாக வளர்ச்சி பெற்றது. இன ஒடுக்கலின் விளைவாக உருவான ஒரு அரசியல் சூழலில் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய போராட்டங்கள் வன்முறைக் குழுக்களின் அரசியலாகியதன் விளைவாக அரசியற் கொலைகள் பெரும் அளவிற்கு விரிவடைந்து விட்டன.

தெற்கில் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போதும் அதற்குச் சில வாரங்கள் பின்னும் ஆயுதப்படைகள் பல ஆயிரம் சிங்கள இளைஞர்களது உயிரை உறிஞ்சின. யூ.என்.பி. இந்தப் புண்ணைக் கிளறி அரசியல் ஆதாயம் தேடியது. ஜே.வி.பி.யின் தலைமையுடனான சரசமும் 1977 தேர்தலின் யூ.என்.பிக்கு அவசியமாக இருந்தது. 1977க்குப் பின்பு படிப்படியாக வலுக்கத் தொடங்கிய அரச அடக்கு முறையானது எதிர்க்கட்சிகள், தமிழ்த் தேசிய இனம், உரிமைக்காகப் போராடும் தொழிலாளர் ஆகிய அனைவர் மீதும் அப்பட்டமான வன்முறையைப் பிரயோகித்தது. தேர்தற் காலத்தில் வாக்குச் சாவடிகளில் துப்பாக்கியுடன் ஆளுங்கட்சியினர் பிரசன்னமாகி மிரட்டியது இந்த அதிகார வெறியின் ஒரு அடையாளமே.

அரச படைகள், பொலிஸ் ஆகியோரது அனுசரணையுடன் நடந்த போதும் இவ்வாறான நிகழ்வுகள் பற்றிக் கேள்வி எழுப்பவும் கண்டிக்கவும் சிறிதாவது வாய்ப்பு இருந்தது. 1983ம் ஆண்டு நடந்த இனவாத வன்செயல்களில் அரசாங்கத்தின் பங்கு பற்றிய ஐயங்கள் இன்று இல்லை.

தமிழ் மக்கள் மீதான இனவாத அடக்குமுறை, தெற்கில் யூ.என்.பி ஆட்சியின் செல்வாக்கை நிறுவப் போதியதாக இருக்கவில்லை. எனவே 1983ல் நடக்க இருந்த பொதுத் தேர்தல் சூழ்ச்சியால் ஒத்திப்போடப் பட்டது. இது அரசாங்கம் தனது பாராளுமன்ற பெரும்பான்மையைக் கொண்டு மக்களை மேலும் இம்சிப்பதற்காகவே என்பதை அடுத்து வந்த ஆண்டுகள் உறுதி செய்தன.

எனினும் அரசாங்கம் 1989 வரை தனது எதிராளிகளை அடக்குவதற்குப் பாவித்த அத்தனை நடவடிக்கைகட்கும் ஏதோ பசப்பான சட்ட பூர்வமான தோற்றத்தையாவது காட்ட முயன்றது. கைதானோர் பற்றிய தகவல்களும் கொலை செய்யப்பட்டோர் பற்றிய விளக்கங்களும் ஒப்புக்கேனும் தரப்பட்டன. அரசாங்கம் தன்னை ஒரு 'குடிசார்' (சிவில்) அரசாங்கமாகப் பாவனை செய்யும் தேவையை என்றாலும் அன்று வரை ஏற்று வந்தது. அதுவரை வடக்கிலும் கிழக்கிலும் நடந்தவை

> "சூரியகந்த" யூ.என்.பியின் வீழ்ச்சிக்கு அளித்த பங்கு பெரிது. சிங்கள மக்கள் இன்னும் அந்த நினைவிலிருந்து மீளவில்லை. செம்மணியில் புதையுண்டு உள்ளவை சூரியகந்தையில் புதையுண்டவற்றை விட இந்த அரசாங்கத்துக்கும் அதன்படை களுக்கும் ஆபத்தானவை என்றுதான் விசாரணைக் கமிஷன் என்ற திரையின் பின்னால் உண்மைகளைப் புதைக்க இந்த அரசாங்கம் முயல்கிறது என்ற சந்தேகம் மிகவும் நியாயமானது.

பயங்கரவாத எதிர்ப்பு என்ற பேரில் நடந்தாலும், மனிதர் பலர் கைது செய்யப்படனர். கொல்லப்பட்டனர். ஆனால் தொகையாக காணாமற் போனதில்லை.

1987ல் இந்தியாவின் குறுக்கீட்டால் ஏற்பட்ட அனர்த்தங்களில் அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் இருந்த உணர்வை இனவாதச் சந்தர்ப்பவாத அரசியலுடன் இணைத்த ஜே.வி.பி தனது வன்முறை – மிரட்டல் அரசியல் மூலம் அரசைக் கவிழ்ப்பதற்கான ஒரு போராட்டமாக மாற்ற முயன்றது. இது அரசாங்கத்தால் மிகவும் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டது. இக்காலகட்டத்திலேயே மனிதர் பெரும் தொகையில் காணாமல் போவது அதிகரித்த அளவில் நடைபெற்றது. 1989ம் ஆண்டின் வெள்ளை வான்கள், நள்ளிரவு விருந்தாளிகள், கரும்பூனைகள், பி.ஆர்.ஆர்.ஏ போன்ற சொற்களை மக்கள் பலகாலத்திற்கு மறக்கப் போவதில்லை. ஆட்கடத்திலிலும் அரசியற் கொலைகளிலும் ஜே.வி.பி ஈடுபட்டது உண்மை. ஆனால் அரசின் பங்கு அதனிலும் பெரியது. ஐம்பது ஆயிரத்துக்கும் ஒரு இலட்சத்துக்கும் இடைப் பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காணாமல் போனார்கள். யூ.என்.பி. அடக்குமுறை ஆடசியில் மரத்து இருண்டு போயிருந்த ஒரு அரசியல் அடிவானம் அடுக்கடுக காக நடந்த அரசியல் கொலைகளால் மெல்ல மெல்ல விழிப்புற்றது. மனித உரிமைகள் பற்றிய வெகுசன உணர்வு அரசாங்கத்திற்கு எதிரான ஒரு வெகுசன இயக்கமாக விரியும் சூழ்நிலை 1990களில் ஏற்பட்டது. சிகரம் வைத்தாற் போல பிரேமதாச ஆட்சி அவரது கொலையுடன் முடிவான பின்பு சூரியக்கந்த எனும் இடத்தில் பாடசாலை மாணவர்களது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

சூரியகந்த பிரேமதாச ஆட்சிக் காலத்தின் போது தெற்கில் நிகழ்த்தப்பட்ட வன்முறையின் ஒட்டு மொத்தமான குறியீடு. பாலகர்களைப் பலியெடுத்த யூ.என்.பி. அரசாங்கம் அகற்றப்பட வேண்டும் என்ற கோப உணர்வும் யூ.என்.பி. ஆட்சியை எதிர்த்த பொதுசன முன்னணியின் முக்கியமான ஆயுதங்களில் ஒன்று. சூரியகந்த பற்றிய பூரண விசாரணை, குற்றவாளிகட்குக் கடுந்தண்டனை என்பன பொ.மு. அளித்த வாக்குறுதிகளில் அடங்கும்.

ஆயினும் நடந்ததென்ன? பல சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப் பட்டும் விசாரணைக்குத் தப்பியும் சுதந்திரமாக உலாவுகின்றனர். இந்தக் கொலைகட்கும் பத்தாயிரக் கணக்கான சிங்கள வாலிபர்களது கொலைகட்கும் காரணமானவர் களோ இன்னமும் வடக்கில் போரின் இயக்குநர்களாகச் செயற்படுகிறார் கள்.

இந்த அரசாங்கம் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வுக்காகப் பாடுபடும் என்ற நம்பிக்கையின் மீதே சிங்கள மக்களிற் பலரும் பெருவாரியான தமிழ், முஸ்லிம், மலையக மக்களும் பொ.மு. ஆட்சிக்கு வர ஆதரவு கொடுத்தார்கள். அந்த நம்பிக்கையைப் பொடிப்பொடியாக்கி இன்று போர் மூலம் சமாதானம் பற்றி இந்த ஆட்சி போதிக்கிறது. இன்றுள்ள நிலைமைகளை நோக்கும்போது அதிகாரத்தில் இருப்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியா? அல்லது ஆயதப் படைகளா என்ற கேள்வி மனதில் எழுகிறது. தேசிய இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை நடைமுறை அரசியல் போராகத்தான் இருக்கிறது. அதில் முடிவுகள் எடுப்பது ஆயதப்படைத் தலைமையாகவே இருக்கிறது. தடைசெய்யப்பட்டுள்ள போர்ச் செய்திகள் பற்றிய தணிக்கைப் பொறுப்பு ஒரு ராணுவ அதிகாரியிடம் இருப்பதும் குடிசார் ஆட்சியில் ஒரு வினோதம் தான்.

தமிழ் மக்கள் கைது செய்யப் படுவதும் காணாமற் போவதும் அங்கும் இங்குமாகப் பலகாலம் நடந்து வந்நதுதான். தலைநகரத்திற் பல தமிழர்களது நிலை அடிமைகளைவிடக் கேவலமானது. காணாமற் போனவர்களது சடலங்கள் கால்வாய்களிலும், குளங்களிலும் மிதந்ததையும் நாம் அறிவோம். 1995 க்குப் பிறகு இவ்வித கொலைச் செயல்கள் நாட்டின் பாதுகாப்புக் கருதியே செய்யப்பட்டதாக மெல்ல அலட்சியம் செய்யப்பட்டன. ஒரு கொலைகூட முழுமையாக விசாரிக்கப்படவில்லை. கொழும்பில் இருக்கிற ஒவ்வொரு தமிழரும் ஒரு சந்தேகநபர் என்பதே அரசினதுமட்டுமன்றி அதன் காவற்படைகளதும் கருத்தாகத் தெரிகிறது. வடக்கில் நடந்த பல

8 ம் பக்கம் பார்க்க

## குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்

☆ கடந்த ஆறு வருடங்களில் மிதிவெடிகளினால் குடாநாட்டில் கால் இழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து எண்ணூறு பேர். இவர்களில் ஆயிரத்து 448 பேர் முப்பது வயதிற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் ஆவார். குடாநாட்டில் மட்டும் ஒரு லட்சம் மிதிவெடிகள், கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

☆ யாழ் போதனா வைத்தியசாலையில் தினம் 150 முதல் 200 பேர் வரை மனநோய் சிகிச்சைப் பிரிவிற்கு வைத்தியத்திற்காக வந்து செல்கின்றனர். அதேவேளை கடுமையான மனநோயாளர்கள் மந்திகை, தெல்லிப்பளை வைத்தியசாலைகளில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. யுத்தமும் அதன் விளைவுகளும் இப்பெரும் தொகை மனநோயாளர்களுக்கான காரணம் என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

☆ குடாநாட்டில் இடம் பெற்ற யுத்த அழிவுகளில் தென்னை, பனை மரங்களும் அடங்கும். இதுவரையான ஆய்வில் 79 ஆயிரத்து 923 தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

☆ காலம் கடந்த நிலையில் பழுதடைந்து தரமற்றதாக எப்பொருட்கள் இருப்பினும் அவற்றை எவ்வித தயக்கமும் இன்றி கொழும்பில் இருந்து அனுப்பி வைப்பதற்கு ஏற்ற இடமாக இப்போது இருப்பது யாழ். குடாநாடேயாகும். அரிசி, மா, மல்லி போன்ற பழுதடைந்த உணவுப் பொருட்கள் முதல் தரமற்ற சீமெந்து வரை தாராளமாக கப்பல் கப்பலாக குடாநாட்டிற்கு வந்து சேர்கின்றன.

☆ குடாநாட்டிற்கான பயணிகள் கப்பல் சேவை நின்று பல மாதங்கள். ஆனால் ஒவ்வொரு மாதமும் கப்பல் வருகிறது வருகிறது எனச் செய்திகள் வந்து கொண்டே இருந்தன. உலகின் பல துறைமுகங்களில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்ட எந்தவொரு கப்பலும் இதுவரை வந்துசேரவில்லை. இறுதியாக தென்கொரியாவில் இருந்து புறப்பட்ட 'ஜனநாயகமும்' வந்து சேரவில்லை. விமான சேவையில் கொழுத்த உழைப்பு இடம்பெறும் போது கப்பல் சேவையை ஏன்தான் நடாத்த வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்துச் சாதியமும் ஈழத்துக் காந்தியும்

## தந்தையும் மைந்தரும் (4)



இந்தியாவில் மோகனதாஸ் காந்தியின் சத்தியாக்கிரக கொள்கை எவ்வளவு தூரம் இந்திய விடுதலைக்கு உதவியது என்பது விவாதத்துக் குரியது. ஆயினும் அவரது தலைமையின் முக்கியத்துவம் கேள்விக்குரியதல்ல. அவரது வர்க்கசார்பை இடதுசாரிச் சிந்தனையாளர்கள் தெளிவாகவே அடையாளங்கண்டனர். சாதியம் பற்றிய அவரது நிலைப்பாட்டின் போதாமையை அம்பேத்கார் எப்போதோ கடுமையாக விமர்சித்தார். ஈ.வெ.ரா. இவ்விடயத்தில் காந்தியை மிகவும் கடுமையாக விமர்சித்தவர் என்பதும் முக்கியமானது. ஆயினும் காந்தியின் கொள்கைகளை ஏற்காதவர்களும் அவரது கொள்கைப் பிடிப்பை மதித்தனர். அது' மூர்க்கத்தனமான பிடிவாத மாகக்கூடப் பல சமயங்களில் வெளிப்பட்டாலும் அது காந்தியின் உறுதியான நிலைப்பாட்டினின்று தளம்பாத தன்மையைப் பிரதி பலித்தது என்பது நியாயமானது. அவரது சத்தியாக்கிரகம் பல விடுதலை இயக்கத் தலைவர்களைக் கவர்ந்தது. நெல்சன் மண்டேலா, மாட்டின் லூதர்கிங் என்போர் இவ்விடத்துக் குறிப்பிடத்தக்க இருவர். மண்டேலா ஆயுதமேந்திய போராட்டத் தேவையை நாளடைவில் உணர்ந்தார். மாட்டின் லூதர்கிங் அமெரிக்க இனவெறியர்களால் கொல்லப்பட்டார். கறுப்பு இன மக்களை எவரும் தாக்கினால் அவர்கள் திருப்பித் தாக் குவார்கள் என்ற உண்மையை 1960 களின் பிற்பகுதியின் நிகழ்வுகள் நிரூபித்தன. காந்தியின் அகிம்சையை நிராகரிப்பது என்பது எல்லாப் பிரச்சினைகட்கும் வன்முறையையே பயன்படுத்துவது என்று கூறுவதாகாது. மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் மக்களுக்கும் எதிரிக்கும் இடையிலான முரண்பாடுகள் என்ற வேறுபாடே அமைதியான தீர்வுக்கும் வன்முறைப் போராட்டத்துக்கான தேவைக்கும் இடையிலான தெரிவை நிர்ணயிக்கின்றன.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஈழத்துக் காந்தியாகக் காட்டப்பட்டதற்கு ஒரே ஒரு அடிப்படை தான் இருந்தது. சாத்வீக முறையில் போராடித் தமிழ் மக்களது மொழி உரிமையையும் தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு சமஷ்டி ஆட்சியையும் வென்றெடுக்க முடியும் என்ற கருத்தும் சத்தியாக்கிரகப் போராட்ட முறையை ஏற்றமையுமே அது. சத்தியாக்கிரகம் ஒரு வெகுஜனப் போராட்டமாக அமைவதற்கான சில அடிப்படைத் தேவைகள் இருந்தன. அதற்குத் தமிழரசுக்கட்சியின் தலைமை ஆயத்தமாக இருந்ததா என்பது கேள்விக்குரியது. இந்த இடத்தில் தனிப்பட்ட வாழ்வில் தீண்டாமைக்கு எதிராகக் காந்தி செயற்பட்ட அளவுக்குத் தமிழரசுக் கட்சியின் எந்தத் தலைவரும் செயற்பட ஆயத்தமாக இருந்தாரா என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

வடபிரதேசத்தில், முக்கியமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதியம் கொலனி ஆதிக்க காலத்தில் மிகவும் இறுக்கமடைந்தது. சாதி ஏற்றத் தாழ்வுகள் சமுதாயத்தின் ஆதிக்க நிலைகளை மிகவும் தெளிவாகவே அடையாளங் காட்டின. குடாநாட்டில் தமிழ்த் தேசியத்தின் முக்கியமான தலைவர்களாக உலாவந்த பொன்னம்பலம் இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோர் சாதியத்தின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. தமிழரசுக் கட்சிக்கு இவ்விடயத்தில் மிகுந்த சங்கடமான ஒரு நிலை இருந்தது. தேர்தல் அரசியலும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே இடது சாரிகளும் பிற முற்போக்குச் சக்திகளும் ஊக்குவித்து வளர்த்த தன்மான உணர்வும்கல்வி முதற்கொண்டு பலவேறு உரிமைகட்கான வேட்கையும் அரசியலில் அவர்களது பங்கை மேலும் முக்கியமான ஒன்றாக்கியது. ஆயினும் அவர்கள் வடக்கில் எந்தத் தேர்தல் தொகுதியிலும் பெரும்பான்மையினராக இருக்கவில்லை. அதைவிட அவர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படக்கூடிய ஒரு வலிய நிலைக்கு வளரவில்லை. எனவே சாதியத்திற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டையும் உயர்சாதியினரது ஆதிக்கத்தைக் கைவிடாதவாறான ஒரு நடைமுறையையும் அவர்கள் கடைப்பிடித்தனர். இந்த இரட்டை வேடத்துக்கு இடைஞ்சலாக இருந்தவர்களுள் கம்யூனிஸ்ட் கட்சியினர் முக்கியமானவர்கள் எனவே 1956க்குப் பின் அவர்களை ஓரங்கட்டுவது பற்றித் தமிழரசுக் கட்சியினர் மிகவும் மும்முரமாகவே இருந்தனர். இதுவும் தமிழ்த் தேசிய வாதத் தலைமை பிரித்தானிய ஆட்சிக்கு காட்டிவந்த விசுவாசமும் இலகுவாகவே உடன்பாடு கண்டன.

1956ம் ஆண்டு தேர்தலின் பின்பு பாராளுமன்ற மூதவைக்கு (செனற்) 10 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறை 1957ல் வந்தது. இவர்களில் 5பேர் அரசாங்கத்தால் நியமனம் பெறுவோர். எதிர்க்கட்சி மினிரிடையிலிருந்து ஒரு தமிழரைத் தெரிவு செய்யும் வாய்ப்பு இருந்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் மத்தியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி ஒருவரை நியமித்து மூதவைக்கு அனுப்ப உத்தேசித்தது. இது தமிழரசுக் கட்சிக்கு சிக்கலை ஏற்படுத்தியது. எனவே சமசமாஜக் கட்சியினரது உதவியுடன் ஜி. நல்லையாவைத் தெரிவு செய்ய ஏற்பாடு செய்தனர். தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக வேண்டும் என்ற விதமாக இடதுசாரி ஐக்கியத்துக்குச் சமசமாஜக்கட்சி குழி பறித்தது இதுதான் முதற் தடவையல்ல. வடக்கில் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே இருந்த செல்வாக்கு மேலும் வளராமல் தடுப்பதில் சமசமாஜக்கட்சி எடுத்த முயற்சி தமிழரசுக்கட்சிக்கு உதவியதே அல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களது போராட்டத்திற்கு எவ்வகையிலும் உதவவில்லை.

ஜி. நல்லையாவை மூதவைக்கு அனுப்பியதன் மூலம் தமிழரசுக் கட்சியால் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தனது அக்கறை பற்றிக் கொஞ்சம் விளம்பரம் தேடமுடிந்தது. இதே கால கட்டத்தில் சாதி முறைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் பண்டாரநாயக அரசாங்கத்துக்கும் ஏற்பட்டது. தென்னிலங்கையின் சாதியம் குடாநாட்டின் தீண்டாமை போல உக்கிரமானதல்ல. எனினும் கரையோரப் பிரதேசங்கள் போக மற்றப் பகுதிகளில் சில சாதிப் பிரிவினர் கண்டியச் சிங்கள கொவிகம (வேளாள) ஆதிக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு சட்டத்திற்கும் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்குச் சமுதாயத்தில் முன்னேறும் வாய்ப்புக்குமான ஒரு தேவை இருந்தது. பின்னையது பண்டாநாயக ஆட்சிக்கு வந்த பின்பு கல்வி, தொழிற்துறைகளில் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் கிடைத்த வாய்ப்புளால் சிறிது இயலுமாயிற்று. முன்னையதைப் பொறுத்தவரை பொது இடங்களில் சாதி அடிப்படையில் எவரையும் கீழ்மைப்படுத்துவதைச் சட்ட விரோதமானதாக்கும் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது ஒரு தனியார் பிரேரணையாகத் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரான ராஜவரோதயத்தால் முன் மொழியப்பட்டுச் சட்டமானது. இச்சட்டவாக்கத்தில் சாதிப்பாகுபாடு காட்டுவோருக்கான தண்டனை மிக அற்பமாகவே இருந்தது. ஆயினும் நாட்டின் எந்தப் பகுதியில் சாதிக் கொடுமை மிக உக்கிரமாக இருந்ததோ அங்கிருந்து வந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தால் அது ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்திருக்கும். மாறாக எங்கே சாதி ஒரு பரிய தேர்தல் பிரச்சனையாக இருக்கவில்லையோ அங்கே இருந்த ஒரு பிரதிநிதியை அச்சட்டவாக்கத்தை முன்மொழியச் செய்து தமிழரசுக்கட்சியின் தலைமையால் தனது இரட்டை வேடத்தை காப்பாற்றிக் கொள்ள முடிந்தது.

1957ல் தமிழரசுக் கட்சியினரால் சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த ஒரு நாள் கூத்துக்கள் நடந்து முடிந்த பின்பும் வடக்கில் கோயில்கள் உட்படப் பலவேறு பொது இடங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் புக முடியாதவையாகவும் சமமாகப் பகிர முடியாதவையுமாகவே இருந்தன. தமிழரசுக்கட்சித் தலைமையைப் பொறுத்தவரை சாதி ஒழிப்புக்கான கடமை 1957ம் ஆண்டுடன் நிறைவு பெற்றுவிட்டது. ஏறத்தாழ 30வீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்த குடாநாட்டில் தமிழரசுக் கட்சியோ தமிழ்க் காங்கிரசோ ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்த முன்வராதது ஏன்? 1977ல் தொகுதிப் பிரிப்பின் போது வடமாராட்சியில் ஒரு தொகுதியில் முதல் முதலாக தமிழர் விடுதலைக் கூட்டணி தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் ஒருவரை நிறுத்தியது. அவ்வாறு நிறுத்தி வெற்றி பெறச் செய்தமைக்கு முக்கிய காரணம் 1966–72 காலகட்டத்தின் இடம் பெற்ற தீண்டாமை ஒழிப்பிற்கான கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்கிய போராட்டங்களேயாகும். இங்கேயும் கம்யூனிஸ்டுக்களை முறியடிப்பதற்கே உடுப்பிட்டித் தொகுதி தமிழர் கூட்டணியினரால் ஒதுக்கப்பட்டது. தமிழ்க் காங்கிரஸ் மேட்டுக் குடிகளது பிரதிநிதியாக வடக்கில் இருந்து வந்த காலம்வரை சாதிப்பிரச்சனையில் தாழ்த்தப்பட்ட மக்களது பிரதிநிதியாகக் காட்டிக் கொள்ளும் தைரியம் தமிழரசுக் கட்சிக்கு இருக்கவில்லை என்பது உண்மை. தைரியம் இல்லாமை மட்டுமன்றித் தமிழரசுக் கட்சிக்குள்ளே சாதிவெறியர்களது செல்வாக்கும் படிப்படியாக அதிகரித்து வந்தது என்பதை 1960களின் பிற்பகுதியின் நிகழ்வுகள் நிரூபித்தன.

> ஏறத்தாழ 30வீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்த குடாநாட்டில் தமிழரசுக் கட்சியோ தமிழ்க் காங்கிரசோ ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்த முன்வராதது ஏன்?

1965–69 கால கட்டத்தில் யூ.என்.பி. யுடன் கூட்டாட்சி நடத்திய "ஈழத்துக் காந்தி" செல்வநாயகம், "தமிழரசுத் தளபதி" அமிர்தலிங்கம் அக்கால கட்டத்தில் வடக்கில் நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை நிந்தித்துப் பேசிய வார்த்தைகளைக் கண்டிக்க வேயில்லை. வன்முறை எதிர்ப்பு என்பது "ஈழத்துக் காந்தி" செல்வ நாயகத்திற்கு ஒரு வசதியான ஆயுதமாகவே இருந்தது. மக்களது நியாயமான ஆயுதப் போராட்டம் ஒன்றை நிராகரிக்க இந்த ஆயுதத்தைப் பாவித்த அளவில் 'ஒரிஜினல்' காந்தியிடமிருந்து ஒரு பயனுள்ள பாடத்தை அவர் கற்றிருந்தார்.

50களின் பிற்பகுதியில் யாழ் குடாநாட்டைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தாங்கள் புத்த மதத்தில் இணைந்ததாக அறிவித்தபோது தமிழரசுத் தலைமை வெகுண் டெழுந்து இந்தக் 'கம்யூனிஸ்ட் சதியை' வன்மையாகக் கண்டித்தது. கம்யூனிஸ்டுகள் என்றுமே சாதியத்தை முறியடிக்க மத மாற்றத்தை மார்க்கமாகக் காட்டியதில்லை. ஆயினும் ஒரு எதிர்ப்பு நடவடிக்கை என்ற அளவில் இந்த மதமாற்றத்தை அவர்கள் அங்கீகரித்தனர். தமிழரசுக்கட்சித் தலைமையைப் பொறுத்தவரை தங்களது இயலாமையையும் வர்க்க, சாதிய நலன்களையும் மூடி மறைக்க யார் மீதாவது பழி போடும் தேவை இருந்தது. இந்த மதமாற்றம் தமிழ்த் துரோகம், சிங்கள பௌத்தத்திடம் சரணாகதி என்றெல்லாம் தமிழரசுக் கட்சியின் அதிகார பூர்வமற்ற பிரசார ஏடான சுதந்திரனால் கடுமையாகத் தாக்கப்பட்டது. சுதந்திரனின் 50% வீத பங்காளியும் அதன் நிர்வாகத்தில் முழு அதிகாரமும் கொண்ட முதலாளியுமான செல்வநாயகம் மௌனமாக அங்கீகரித்த செயல்களுள் சுதந்திரனின் விஷமங்களும் அடங்கும். தமிழ் மக்களிடையே தமிழ் இன வெறியை வளர்ப்பதில் சுதந்திரனின் பங்கு 1956 முதல் முக்கியமான ஒன்றாகவே இருந்து வந்தது.

---

## அமெரிக்காவுக்கு எதிரான போர்ப்பிரகடனம்

ஏகாதிபத்தியமே எமது பிரச்சனைகளுக்கு பிரதான பொறுப்பு ஏறக்வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வோமேயானால் ஏகாதிபத்தியத்தினை ஒழிக்க வேண்டும் என்பதை பிரதான இலக்காக கொண்டேயாக வேண்டும். அதற்காக அதனது தலை எங்கிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வது தலையாய கடமை ஆகும். அதன் தலை வேறெங்கும் இல்லை. அமெரிக்க ஏகாதிபத்தியமே ஏகாதிபதத்தியத்தின் தலை.

ஏகாதிபத்தியத்தின் தலையை அடையாளம் கண்டுவிட்டபிறகு மனித குலத்தின் பிரதான எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்களை ஐக்கியப்படுத்த வேண்டியது எமது முழுமையான நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

எப்போதாவது இறப்பு எங்களை சந்தித்து [illegible]

தோழர் சேகுவாரா

நன்றி - நூலகத்திட்டம்



# இது ஒரு புதியவகை முன்னணி

புதிய ஜனநாயகக் கட்சி, நவசமசமாஜக் கட்சி. ஐக்கிய சோஷலிஸக் கட்சி, முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி, தேசிய ஜனநாயக இயக்கம், தியேச கல்வி வட்டம் உட்பட பல அமைப்புக்களின் முயற்சியினால் புதிய இடதுசாரி முன்னனி தொற்றம் பெற்றுள்ளது. இந்நாட்டின் தொழிலாளி, விவசாயிகள். அடக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலையை அதனது இலக்காக கொண்ட, வேலைத்திட்டத்தை மக்கள் விஞ்ஞாபனம் என்ற பெயரில் வெளியீடப்பட்டுள்ளது. இந் நாட்டின் தொழிலாளிகள், விவசாயிகளையும், எல்லா தேசிய இனங்களையும் பிரதிநிதிப்படுத்தும் அமைப்புக்களே இதன் பங்காளிகளாகின்றன.

வேலைத்திட்டம் அமைக்கப்பட்டது முதல் பிரகடனக்கூட்டம் வரை மிகவும் ஜனநாயகமான முறையில் அதனது பயணம் நடைபெற்றுள்ளது. அதனது யாப்பிலும் கூட்டுத்தலைமை, கூட்டுமுடிவு என்பன பிரதான இடங்களை எடுத்துக் கொண்டுள்ளன. அதேவேளை அங்கத்துவம்வகிக்கும் கட்சிகளும், அமைப்புகளும் தனித்தனியாக சுதந்திரமாக இயங்க எவ்விதத் தடையும் இல்லை.

வெகுஜனப் போராட்டத்தையே இந்நாட்டு மக்களின் விடுதலைக்கான பாதையாக கொண்டுள்ள இக்கூட்டணி வெகுஜனப் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையிலேயே தேர்தல்களில் போட்டியிடுவதேன பிரகடனப் படுத்தியுள்ளது. பிரகடனப்படுத்திய அன்றே நடைமுறையிலும் அதனை எடுத்துக்காட்டியது. பாராளுமன்ற தேர்தல் பாதையில் மூழ்கிவிட்ட பழைய இடதுசாரிகள் போலன்றி மாகாண சபைகளுக்கான நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துவிட்டு கொழும்பு லிப்டன் சந்தியில் யுத்தத்திற்கு எதிராகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் மறியல் போராட்டத்தை செய்து அதனது வெகுஜன அரசியல் வேலையை தொடங்கியது. யூலை 15ஆம் திகதி நடைபெற்ற அந்த மறியல் போராட்டத்திற்கு பிறகு லிப்டன் சந்தியிலிருந்து ஊர்வலமாக கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்திற்கு சென்று புதிய இடதுசாரி முன்னனியினர் அவர்களின் கொள்கை பிரகடனக் கூட்டத்தை நடத்தினர். அக்கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களும் புதியனவாகவே இருந்தன.

அவர்களின் கொள்கைத் திட்டத்துடன் இணக்கம் காண்கின்ற ஏனைய இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகளை இணைத்துக் கொள்வதற்கான திறந்த மனதுடன் செயற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மாற்று இடதுசாரி சக்தியை கட்டிவளர்க்க வேண்டுமாயின் பரந்தளவில் திறந்த மனத்துடன் செயற்பட்டு சகல மக்களையும் அணிதிரட்டக் கூடியதா இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றனர்.

எனவே இது ஒரு புதியவகை கூட்டணிதான். இது புதிய நடைமுறைகளையும், நேர்மையாக, உண்மையாக, பரந்துபட்ட மக்களின் நலனை முதன்மைபடுத்தி முன்னெடுக்கும் என்று நம்புவோம். இடதுசரிகள் பற்றியும், அவர்களின் நேர்மை பற்றியும், மாற்று இடதுசாரி பாதை பற்றியும் நாட்டு மக்களின் மனங்களில் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தி வளர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

## சூரியகந்த.......

6ம் பக்க தொடர்ச்சி

கொலைகள் போரின் பேரால் நியாயப்படுத்தப்பட்டன. இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் காணாமல் போனார்கள். அவைகூட அலட்சியப் படுத்தப்பட்டன. சனாதிபதியிடம் செய்யப்பட்ட முறையீடுகளால் எவ்விதமான பயனும் இல்லை. விடுதலைப் புலிகளது மனித உரிமை மீறல்களையும் போர்குற்றச் செயல்களையும் காட்டித் தனது நடத்தையை நியாயப்படுத்துவதையும் போர்மூலம் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பதையும் விட இந்த ஆட்சிக்கு தமிழ் மக்கள் மீது எந்தவிதமான அக்கறையும் இல்லை என்பதே உண்மை. இடையிடையே எழும் ஆட்சேபனைக் குரல்கள் போக மற்றப்படி அரசாங்கத்திற்கு எல்லாமே வழமைபோல நடந்தது வருகின்றன.

பாடசாலை மாணவி கிருஷாந்தி வன்கலவிக்கு உட்படுத்தப்பட்டு அவரும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்ட விடயம் கூட அமுக்கப்பட்டிருக்கக் கூடிய ஒன்றுதான். ஆயினும் பயங்கரவாத சந்தேகநபர் போர்ச்செயல் என்ற பேர்களில் மூடி மறைக்க முடியாத விதமான இந்தக் கொலை நிகழ்வு உள்நாட்டிலும், வெளிஉலகிலும் பலரது கவனத்தையும் பெற்றது. எனவே அரசாங்கம் இதையும் தனக்கு வசதியாகப் பாவிக்க முயன்றது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சில ராணுவத்தினருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்ததை வைத்து இந்த அரசாங்கம் இதுவரை கவனிக்கத் தவறிய எத்தனையோ நூற்றுக்கணக்கான படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் பூசி மெழுகலாம் என்ற எதிர்பார்ப்பு குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரது வாக்கு மூலத்தால் நொறுங்கி விட்டது.

செம்மணி மயான அயலில் நூற்றுக்கணக்கானவர்களது உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் தன்னால் அந்த இடங்களைக் காட்ட முடியும் என்றும் அந்த இளம் குற்றவாளி கூறியதை அடுத்துத் தமிழ் அரசியல்வாதிகள் சிலருடைய தமிழ் இன உணர்வு சிறிது உயிர்பெற்று விசாரணைக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசாங்கமும் வேறு வழியின்றி ஒரு குழுவை நியமித்தாலும் அக்குழு உடனடியாக செய்ய வேண்டிய பணிகளை இன்னும் செய்யவில்லை.

செம்மணி அயலில் உள்ள பிணங்கள் பல அகற்றப்படவோ, அழிக்கப்படவோ கூடும் அடையாளங்காட்ட முன்வந்த குற்றவாளி கொலை செய்யப்படவோ அவரது குடும்பம் மிரட்டப்பட்டு அவரது மனம் மாற்றப்படவோ கூடும். இன்னும் பல வகைகளில் விசாரணை பயனின்றியும் போகலாம். முன்பு நடந்த பல ராணுவப்படு

11ம் பக்கம் பார்க்க

(தணிக்கை உத்தரவுக்கமைய கவிதை எழுதல்)

## **** பற்றிப் பேசாமலிருத்தல்

அரசாங்க ஆணைப்படி
****ச் செய்திகட்குப் பூரணமான தடை.
**** பற்றிப் செய்திகளைத் தொலைக் காட்சியிலோ
வானொலியிலோ ஒலி பரப்பவும்
புதினத் தாள்களிற் பிரசுரிக்கவும்
மின் மடல் மூலமோ தொலை மடல் மூலமோ
தொலை பேசி மூலமோ பரிமாறவும்
தடை விதிக்கப் பட்டுள்ளது.
இது அரசாங்க ஆணை.
அதற்கும் மேலாகப். பொறுப்பதிகாரிகள்
மாநகரின் பெருந் தெருவை இரவு பகலாக அளந்தபடி
கூவுகிற அம்புலன்சுகளின் சைரன்களின்
மின் கம்பிகளைத் துண்டிக்கலாம்.
இரத்த தான விளம்பரங்களையும்
முற்றாக நிறுத்தி விடலாம்.
இனி வரமாட்டாத மகனையோ கணவனையோ
காதலனையோ சகோதரனையோ தோழனையோ
எண்ணி அழுகுரல் எழுப்பும் ஒவ்வொரு வாயிலும்
ஒரு துணிப் பந்தை அடைக்கலாம்.

அல்லது நாம்
அதற்குப் பதிலாக
**** செய்வதை நிறுத்த வழி தேடலாம்.
**** இல்லையாயின்
****ச் செய்திகளைத் தடைசெய்யும் தேவையும்
இல்லாது போய் விடலாம்....

06-06-98 புவனம்.

## அந்தக் காலமும் இந்தக் காலமும்

மலையக மக்களே தலைவரு ஏச்சது
அந்தக் காலம் - அது அந்தக் காலம்-நம்
தலைவரு மாரிடம் கேள்விகள் கேப்பது
இந்தக் காலம் - இது இந்தக் காலம்
தலைவரெ நம்பி உரிமை மறந்தது
அந்தக் காலம் - அது அந்தக் காலம்-நம்
வலிமையெ நம்பி போரிட வந்தோம்
இந்தக் காலம் - இது இந்தக் காலம்
பணிவு முக்கியம் அந்தக் காலம்
துணிவு முக்கியம் இந்தக் காலம்
குனிஞ்சி போனது அந்தக் காலம்
துணிஞ்சி நிப்பது இந்தக் காலம்
(மலையக மக்களே)

நம்மளை வித்து தலைவரு தின்னது
அந்தக் காலம் - அது அந்தக் காலம்-இனி
நம்மளை ஏய்க்கற ஆளினி வாணாம்
இந்தக் காலம் - இது இந்தக் காலம்
கெஞ்சி கேட்டது அந்தக் காலம்
செஞ்சி காட்டுவோம் இந்தக் காலம்
அஞ்சி நின்னது அந்தக் காலம்
நெஞ்சில் தைரியம் இந்தக் காலம்
(மலையக மக்களே)

தொண்டா சொன்னா மறுபேச்சில்லே
அந்தக் காலம் - அது அந்தக் காலம்-அந்த
தொண்டா பேச்சு துட்டு பொறாது
இந்தக் காலம் - இது இந்தக் காலம்
சந்திர சேகரன் அந்தக் காலம்
சந்தி சிரிக்குது இந்தக் காலம்
செங்கொடி சங்கம் அந்தக் காலம்
சங்கதி வெக்கம் இந்தக் காலம்
(மலையக மக்களே)

சந்தா காசிலெ சங்க கோபுரம்
அந்தக் காலம் - அது அந்தக் காலம்-இனி
வந்தா இங்கே வெரட்டுப் புடுவோம்
இந்தக் காலம் - இது இந்தக் காலம்
சல்லி முக்கியம் அந்தக் காலம்
கொள்கை முக்கியம் இந்தக் காலம்
சொல்லு முக்கியம் அந்தக் காலம்
செயலு முக்கியம் இந்தக் காலம்
(மலையக மக்களே)

ஆளுங் கட்சிக எங்களெத் தேச்சது
அந்தக் காலம் - அது அந்தக் காலம்-இனி
நாளைய உலகம் நம்மட தென்போம்
இந்தக் காலம் - இது இந்தக் காலம்
போலிஸ் ராணுவம் அந்தக் காலம்
பயப்பட மாட்டோம் இந்தக் காலம்
போலிகள் ஆண்டது அந்தக் காலம்
புது ஒரு உலகம் இந்தக் காலம்
(மலையக மக்களே)

(கலை வாணர் என்.எஸ். கிருஷ்ணனுடைய இதே தலைப்பிலான பாட்டின் மெட்டு)

## துரோகிகள்......

2பக்கத் தொடர்ச்சி

அறிவோம். அங்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட பிறகே மேற்படி துரோகிகள் என்றழைக்கப்படும் அரசியல் கலாசாரம் தொடங்கியது. பின்னர் 'துரோகிகள்' அழிக்கப்பட்டனர். இன்று அதன் வேதனைகளை முழு தமிழினமே அனுபவிக்கின்றது.

எனவே இந்திய வம்சாவளி மக்கள் பேரணி தலைவர்களும் 'துரோகிகள்' என்ற பதத்தை அவர்களது அரசியல் அறிமுகம் செய்யத் தொடங்கியுள்ள வேளையில் வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் பாடங்களையும் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அரசியலில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் மக்களுக்கு போதியமட்டும் துரோகமிழைத்துவிட்டு கருத்தை கருத்தால் வெல்ல முடியாத நிலையில் 'துரோகிகள்' போன்ற சொற்களை அரசியல்வாதிகள் பிரயோகிக்கின்றனர். அவர்களது அரசியலை சீரியசாக காட்ட முயற்சிப்பர்.

இங்கு இந்தியவம்சாவளி மக்கள் பேரணியின் அரசியலை அய்யாத்துரை சீரியசாக காட்ட முற்படுகிறார். அவர் இப்போது மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியெல்லாம் கதைக்கிறார்.

ஆனால் மலையக வைத்தியசாலைகளுக்கு உபகரணங்கள் தேவையென்று வாஜ்பேயிடம் தொண்டமான் கெஞ்சியுள்ளார். இந்திய வம்சாவளி மக்கள் பேரணியின் சீரியசான அரசியல் இதுதான்.

நன்றி - நூலகத்திட்டம்



## 20 ஆண்டுகள் கடந்து வந்த

# புதிய ஜனநாயகக் கட்சி

## நுவரெலியாவில் நிறைவு விழா நடத்தியது.

கடந்த ஜூலை 3ம் திகதியுடன் புதிய ஜனநாயகக் கட்சிக்கு இருபது ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. இது குறித்த கட்சியின் 20வது ஆண்டு நிறைவு விழா 19-07-98 அன்று நுவரெலியா நகரின் புதிய நகரசபை மண்டபத்தில் மிக விமரிசையாக இடம் பெற்றது. தோழர்கள் சி.கா. செந்திவேல், இ. தம்பையா, சோ.தேவராஜா, சி.நவரத்தினம், சி. இராஜேந்திரன் ஆகியோர் தலைமைக் குழுவாகவும் ஏனைய கட்சி மத்திய உறுப்பினர்கள் மேடையில் அமர்ந்திருக்கவும், செஞ்சட்டைத் தொண்டர்கள் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் அரிவாள் சம்மட்டி பொறித்த சிகப்பு நினைவு அட்டையை தலைவர்களுக்கு அணிவித்து கம்யூனிஸ்ட் புரட்சிகர முஷ்டி வணக்கத்தை தெரிவித்துக் கொண்டதுடன் விழா ஆரம்பமானது.

தொடக்கத்தில் கட்சியின் ஆரம்பத் தலைவர்களில் முதன்மையானவரும், வழிகாட்டியும், முதல் பொதுச் செயலாளருமாகப் பணிபுரிந்து மறைந்தவருமான தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் பற்றிய நினைவுரையை பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் ஆற்றினார். அத்துடன் மறைந்த முதுபெரும் தோழர் டாக்டர். சு. வே. சீனிவாசகம், மறைந்த கட்சி உறுப்பினர் சி. துரைசிங்கம் ஆகியோர் பற்றிய நினைவுகள் உரையின் போது நினைவு கூரப்பட்டு அவர்களுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் மூத்த கம்யூனிஸ்ட் தோழரும் புதிய ஜனநாயக கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான தோழர் இ.கா. சூடாமணி செங்கொடி போர்த்தி சிகப்பு ரோஜா மலர் கொத்து வழங்கி பலத்த கரகோஷத்தின் மத்தியில் கௌரவிக்கப்பட்டார். அவரது கட்சி வாழ்வின் பணிகள் பற்றியும் தொடர்ச்சியான இலட்சியப் உறுதிப்பாடு பற்றியும் உரையில் குறிப்பிடப்பட்டது. தோழர் ஜே. சற்குருநாதன் விழா வரவேற்புரையை நிகழ்த்தினார். அடுத்து விழாவின் தலைமை உரையை கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா ஆற்றினார். மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை வழிநின்று கடந்த இருபது ஆண்டுகளாக கட்சி தொடர்ச்சியாக செயல்பட்டு வந்துள்ளதையும் எதிர்காலத்தில் மேன் மேலும் வளர்ச்சி அடைந்து செல்வதற்கான மார்க்கத்தையும் தனது தலைமை உரையில் அவர் சுட்டிக் காட்டினார்.

கட்சியின் இருபதாவது ஆண்டு நிறைவு உரையை கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் ஆற்றினார். சர்வதேச ரீதியாக மாக்சிசம் லெனினிசம் நெருக்கடிகளை எதிர் நோக்கிய ஒரு சூழலிலும் தேசிய ரீதியாக ஐக்கிய தேசியக் கட்சி கொடுர ஆட்சி நடாத்த திட்டங்கள் தீட்டிக் கொண்டிருந்த ஒரு கால கட்டத்திலேயே நமது கட்சி ஒரு சில தோழர்களோடு ஆரம்பிக்கப் பட்டது. இன்று இம்மாபெரும் மக்கள் திரளோடு இருபதாவது ஆண்டுப் பூர்த்தியினைக் கட்சி விழாவாக நடத்தும் போது கடந்த காலங்களில் எமது தோழர்கள் கட்சியைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதில் பட்ட வேதனைகள் சோதனைகள் துன்ப துயரங்கள் யாவும் நினைவு கொள்ள வேண்டியவைகளாகும். நமது கட்சியின் தலைமைத்ட தோழர்கள் தொட்டு அடிமட்ட உறுப்பினர்கள் வரை ஒவ்வொருவருக்கும் பின்னால் ஒரு வரலாறு இருந்து வந்துள்ளது. அது மக்களுக்கு விரோதமான குறுக்குவழிகள் கொண்ட வரலாறு அல்ல. மாறாக மக்களுக்குப் பணிபுரிந்து மக்களுக்காக துன்ப துயரங்களையும் தியாகத் தழும்புகளையும் ஏற்றுக் கொண்ட வரலாறு உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நீண்ட பாரம்பரியத்தின் தொடர்ச்சியானது மாகும் என்று குறிப்பிட்டார். எனவே எதிர் காலத்தில் மேன்மேலும் ஆயிரம் ஆயிரம் கம்யூனிஸ்ட்டுக்கள் பரித்தியாக உணர்வோடு புதிய ஜனநாயக கட்சியின் வழிகாட்டலின் கீழ் அணிதிரள்வார்கள் என்பதில் ஐயம் இல்லை என்றும் தோழர் செந்திவேல் தனது நிறைவுரையில் குறிப்பிட்டார்.

மேலும் தோழர்கள் சோ. தேவராஜா, எஸ். இராஜேந்திரன், எஸ். பன்னீர்செல்வம், சி. சுப்பிரமணியம் ஆகியோர் கட்சி முன்னெடுக்க வேண்டிய பணிகள் பற்றி உரையாற்றினார்.

மேலும் கட்சியின் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிநாட்டுச் சகோதர மாக்சிச லெனினிசக் கட்சிகள் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. பத்துக் கட்சிகள் தமது வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேற்படி விழாவிற்கு புதிய இடதுசாரி முன்னணியில் அங்கம் பெறும் கட்சிகளின் தலைவர்கள் நேரில் சமூகம் தந்து வாழ்த்துரைகள் வழங்கினர். நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரியா, தேசிய ஜனநாயக இயக்கத்தின் சார்பில் சேனக பெரேரா, தியேச கல்வி வட்ட அமைப்பாளர் வசந்த திசாநாயக்கா, மக்கள் விவாத கேந்திர அமைப்பாளர் பிரடி கமகே ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் பிரடிகமகேயின் 'நெருப்புக் கண்ணீர்' புகைப்படக் கண்காட்சியும், யுத்தத்திற்கு எதிரான பிரபல சிங்களப் பாடகர் ஜயதிலக பண்டாரவின் 'சாது ஜனராவய' இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றன. மேற்படி புதிய ஜனநாயகக் கட்சியின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கொழும்பு, யாழ்ப்பாணம்; வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களிலிருந்தும் பெருந்தொகையான கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் வந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அன்று காலை 10 மணிக்கு ஆரம்பித்த விழா பி.ப. 3.30 மணிவரை இடம் பெற்றது.



புதிய ஜனநாயகக் கட்சியின் 20வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்

### மலையக மாண...

2ம் பக்கத் தொடர்ச்சி

பாடசாலை மட்டத்தால் நடைபெறுகின்ற புலமைப்பரிசில் பரீட்சை பாடங்களை வெளியிடுகிற பத்திரிகைகளை நகர்ப்புற பிள்ளைகள் படிக்க வாய்ப்பு உண்டு. ஆனால் மலையக மாணவர் களுக்கு அவை கிடைப்பதில்லை. இப்படியிருக்கும் போது அவர்கள் எப்படி இந்த பரீட்சையில் சித்தி அடைவர்.

போசாக்கின்மையை நோக்கும் போது மலையக மக்களிடம் காசில்லாத நிலையில் அவர்களுக்கு போசாக்கான உணவை வாங்கித்தர பெற்றோருக்கு முடியாத நிலையில் இருக்கிறார்கள். மலையகத்திலேயே போசாக்குள்ள உணவு இருக்கிறது. ஆனால் அவர்களால் அதன் பயனை அறிய முடிவதில்லை. மருத்துவ பிரச்சினையும் பெரும் பிரச்சனையாக உள்ளது. வைத்தியசாலை இல்லாததால் தூர இடங்களுக்கு சென்று மருத்துவம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மருத்துவர்கள் ஒழுங்காக சேவையில் ஈடுபடாததாலும் மக்களுக்கு பெரும் பிரச்சனை. மருத்துவர்கள் இருந்தாலும் போசாக்குள்ள உணவுகளை பற்றிய ஆலோசனை வழங்காததால் மலையகச் சிறுவர்கள் போசனை குன்றி காணப்படுகிறார்கள். போக்குவரத்து வசதியில்லாததால் இவர்கள் தூர இடங்களுக்கு நடந்து சென்று கல்வி கற்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதனாலும் கல்வி பாதிப் படைகிறது.

மலையக மாணவர்களை திறமையில்லாதவர் எனச் சிலர் கூறுகிறார்கள். அடிப்படை பராமரிப்பு இல்லாத எந்த குழந்தையிடம் திறமையை எதிர்பார்க்க முடியும். கொஞ்சமாவது அடிப்படை பராமரிப்பு கிடைத்தால் அவர்களிடம் நியாயமான அளவு திறமையை எதிர்பார்க்க முடியும். இவை கிடைக்காத நிலையிலும் கூட அம்மாணவர்கள் திறமை யானவர் களாகவே காணப்படுகின்றனர். அடிப்படை வசதி ஐம்பது வீதமாவது கிடைக்குமானால் மலையகத்தில் அத்தனை மாணவர்களும் சமூகத்தில் ஒரு உயர்ந்த நிலையை அடைவார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இவற்றுக்கு எல்லாம் ஒரு தீர்வு கண்டு மலையக மாணவர்கள் சமூகத்தில் ஒரு உயர்ந்த இடத்திற்கு வரவேண்டும் என்பதுதான் என் போன்றவர்களது பேரவாவாகும்.

சமூகப்பிரியன்
ஆண்டு 8 மாணவன்
அட்டன்

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவும் அணு ஆயுதங்களும்


இந்தியாவின் அணுகுண்டு வெடிப்புப் பற்றி அங்கு ஆனந்தக் கூத்தாடினோர் பலர். இந்தியத் தேசியவாத மேலாதிக்க வாதிகளும் தேசியவாத மாயையில் அகப்பட்டவர்களும் பற்றி நமக்கு வியப்பில்லை. அறியாமை காரணமாக இப்பொறியில் அகப்பட்டவர்கள் பலர். எனினும் இந்த அணுகுண்டு வெடிப்பை எதிர்த்தவர்களில் காங்கிரஸ் காரர்களும் இடதுசாரிகளும் முக்கியமானோர். (தி.மு.க. தலைமை கயிற்றின் மேல் நடக்கும் வித்தையில் மேலும் தேர்ச்சிபெற்று வருகிறது என்பதைக் கருணாநிதியின் சாதகமான நிலைப்பாடு காட்டிவிட்டது.)

காங்கிரஸ்காரர்கட்குத் தங்களது ஆட்சியின் கீழ் விருத்தி செய்யப்பட்ட குண்டுகளை பா.ஜ.கட்சி வெடிக்க வைத்துத் தனக்குப் பெருமை தேடிக்கொண்ட வயிற்றெரிச்சல். இடதுசாரிகளது எச்சரிக்கை, இந்திய அயலுறவுகள் மீது இந்தக் குண்டு வெடிப்புகள் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றிய கரிசனையினதும் ஆயுதக் கட்டுப்பாடு, இராணுவச் செலவைக் குறைத்தல் என்ற கொள்கைகளதும் விளைவானது.

இந்தக்குண்டு வெடிப்பை வசதிப்படுத்த ஜோர்ஜ் ஃபெர்ணான்டெஸ் மூலம் ஒரு நாடகம் ஆடப்பட்டது என்பது இன்று ஒரு மிக நியாயமான சந்தேகம். ஆதாரம் எதுவும் இல்லாமலே சீனாவின் ஏவுகணைகள் இந்தியாவுக்குக் குறி வைக்கப்பட்டுள்ளதாகவும் பர்மாவின் கோகோ தீவில் சீனத் தளம் இருப்பதாகவும் அவர் வைத்த குற்றச் சாட்டு பற்றிச் (சீனாவின் கடும் மறுப்பின் பின்பு) பா.ஜ.கட்சியோ அரசாங்கமோ ஃபெர்ணான்டெஸின் கூற்றுக்கு பொறுப்பில்லை என்று வாஜ்பாயி அறிவித்தார். ஃபெர்ணான்டெஸ் சீனாவும் பாகிஸ்தானும் இந்தியாவுக்குப் பெரிய அச்சுறுத்தல்கள் என்றும் பேசி வந்தார். இவையும் எதிர்க்கட்சிகளது கண்டனத்துக்கு ஆளாயின. இங்கும் வாஜ்பாயி அரசாங்கத்தின் நிலைப்பாடு அதுவல்ல என்று கூறினார்.

இந்தியாவின் பாதுகாப்பு மிரட்டலுக்கு உள்ளாகிறது என்ற மயக்கத்தை உருவாக்கி அணுகுண்டுச் சோதனைக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்கும் இந்த ஏமாற்று முயற்சி பற்றி அணுகுண்டுப் பரிசோதனைகள் முடிந்த பின்பே நமக்குத் தெளிவாகியது. எனினும் இந்திய அணுகுண்டுப் பரிசோதனைகளை நியாயப் படுத்துவதில் இலங்கைத் தமிழ் பத்திரிகைகள் மும்முரமாக நின்றன.

இந்தியா தன் முதற்கட்டப் பரிசோதனையை நடத்தியபோது மிகவும் கவனமாகவே தென்னாசிய அமைதி பற்றித் தனது கரிசனையை சீனா தெரிவித்தது. தனது செயலை நியாயப்படுத்தி அமெரிக்காவிடம் தனக்கு கருணை காட்டுமாறு வேண்டுகிற நோக்கில் சீன மிரட்டல் பற்றி இந்திய அரசாங்கம் வெளிப்படையாகக் கூறிய பின்னரே இந்தியாவின் இரண்டாவது கட்ட அணு ஆயுதப் பரிசோதனைகள் பற்றிச் சீனா தனது கண்டனத்தைத்



தெரிவித்தது.

சீனா அணு ஆயுதங்களை விருத்தி செய்வதற்கு அவசியமாக இருந்த சர்வதேசச் சூழலில் சீனாவுக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பிரயோகிப்பதாக இரு பெரு வல்லரசுகளும் வெளிவெளியாகவே மிரட்டியிருந்தன. சீனாவுடனும் பாகிஸதானுடனும் உறவுகள் சீர்ப்பட்டு வருகிற ஒரு சூழலில் இந்தியா தனது செயலை நியாயப்படுத்தியுள்ளது. இந்த அபத்தம் நமது தமிழ்ப் பத்திரிகை முதலாளிமார்கட்கு விளங்காது.

இருபது ஆண்டுகட்கு முன்புவரை அணிசேரா நாடுகளின் வரிசையில் உறுதியான அணுஆயுத விஸ்தரிப்புக்கு எதிராக இருந்த இலங்கை இந்தியாவுக்கு பாராட்டுத் தெரிவித்து விட்டு அதே கையுடன் பாகிஸ்தானுக்கும் சினாவுக்கும் விளக்கங் கொடுக்க ஓடியதும் அமெரிக்காவிடம் கெஞ்சுவதும் பற்றி விளங்கிக் கோள்ள சிரமமில்லை.

ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மூலம் பா.ஜ.க. அரசின் துணையைப் பெறலாம் என்ற தமிழ்த் தேசியவாத நப்பாசை இந்தக் குண்டு வெடிப்பாற் பெருமளவும் தகர்ந்து போய்விட்டது. நமது தமிழ் பத்திரிகைகட்கு இது எப்போது உறைக்குமோ தெரியாது. அது ஒரு புறமிருக்க பாகிஸ்தான் இந்தியாவைத் தொடர்ந்து தனது முதலாவது சோதனைத் தொடரை நடத்திய போது ஜோர்ஜ் பெர்ணான்டெஸ் இவை 'பிங்பெங் பந்துகள் என்று ஏளனம் செய்தார். பாகிஸ்தானின் பின்னைய பெரிய ஆயுதச் சோதனைத் தொடரின் பின்பு, அவை என்ன பந்துகள் என்று அவராற் கூறமுடியாது போய் விட்டது. மண்ணே ஒட்டாத மீசை அவருக்கு. எனவே "இந்திய அரசு விரித்த வலையில் பாகிஸ்தான் விழுந்து விட்டது" என்று அறிக்கை விட்டார். பாகிஸ்தானிடம் குண்டுகள் இருப்பதை அறிந்திருந்த இந்தியா வெடிப்பித்து பகிரங்கப் படுத்தி எதைச் சாதிக்க முடியும். நமது தமிழ் ஏடுகள் அவருக்கு சளைத்தவை களல்ல. எனவே இப்போது பாகிஸ்தானின் அணுஆயுத விருத்தி பற்றிப் புதிய கண்ணோட்டத்தில் ஆய்வுகள் நடக்கின்றன.

சீனாவைக் காட்டி இந்தியா குண்டு வெடிப்பை நடத்தியது நியாயமென்றால், இந்தியாவைக் காட்டிப் பாகிஸ்தான் குண்டு வெடித்தது அதைவிட நியாயமானது. இந்தியாவின் செயல் பற்றி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து நியாயப் படுத்தியவர்கள் பாகிஸ்தானின் செயல்பற்றி மட்டும் நிதானமான ஆய்வுகளில் இறங்குவது ஏன்?

சீன–இந்திய, இந்திய–பாகிஸ்தான் எல்லைத் தகராறுகளில் இந்திய அரசின் குற்றங்கள் பற்றிய எந்த விதமான விளக்கமும் மக்களை எட்டாதபடி இருப்பதில் நமது ஏடுகளும். தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் கவன மாகவே இருந்து வந்துள்ளன. இந்த விதமான குருட்டு விசுவாசத்திற்கு 1987–89 கால இடை வெளியில் தமிழ்த் தலைமைகள் நல்ல பரிசொன்றைத் தமிழ் மக்களுக்கு வாங்கிக் கொடுத்ததையும் நமது ஏடுகள் மறந்து விட்டன.

இன்று இந்தியாவில் ஆட்சியில் இருப்பது இந்தி மொழி வெறியர்களதும் இந்துமத வெறியர்களதும் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கட்சி. இந்த அணுகுண்டுச் சோதனைகளைத் தொடர்ந்து இராணுவச் செலவைப் 17% அதிகரித்துள்ளது. இந்தச் செலவுக்கான பணம் யாரிடமிருந்து கறக்கப்படும்? எப்போதும் போல பலியாவோர் இந்திய ஏழைகளே. அரைவாசிக்கும் மேற்பட்டோரது வாழ்க்கை நிலை பாரிய வறுமையைத் தொட்டுக் கொண்டோ அல்லது கொடும் வறுமையிலோ உள்ள நாடு இந்தியா. இந்தியா வல்லரசாக வேண்டுமாயின் அது யாருடைய வல்லரசாக வேண்டும் என்பதுதான் முக்கியமான கேள்வி. சாதிய, மதவாத, மொழி வெறியர்களது வல்லரசால் யாருக்கு நன்மை?

இந்திய ஆட்சியாளர்களை நியாயப்படுத்த நமது ஏடுகள் பாவிக்கும் ஒவ்வொரு வாதமும் ஏன் தன்னையே பலவீனப்படுத்தும் இன்னொரு மறுபக்கத்தை உடையனவாயிருக்கின்றதா? இது பற்றி நாம் சிந்திக்க வேண்டாமா?

## மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலம்

# புதிய ஜனநாயக கட்சியும் மொட்டைக் கடதாசியும்

இரண்டு வாரத்திற்கொரு தரம் வருகிற பத்திரிகையான சரிநிகர் என்.ஜி.ஓ. பணத்தில்தான் நடத்தப்படுகிறது. பிரேமதாசவின் கீழ் ஆட்சி தன் சரிவை நெருங்கிய காலத்தில் இந்தப் பத்திரிகை உருவானது. பிரதான தினசரிப் பத்திரிகைகள் சொல்லத் தயங்கிய பல விடயங்களை இதில் வெளியிட்டதால் இதற்கு ஒரு மரியாதை இருந்தது. மேர்ஜ் என்ற நிறுவன ஆதரவும் பாதுகாப்புமே சிலகாலங்களில் இந்தப் பத்திரிகை சம்பந்தமானவர்களுக்கு ஏற்பட்டநெருக்கடிகளின் போது உதவியது. மேர்ஜின் உள் அரசியலில் புலி எதிர்ப்புக் குழு ஒன்று வலிமை அடைந்ததன் விளைவாக சரிநிகர் பல விடயங்களில் விட்டுக் கொடுக்கும்படியும் ஏற்பட்டது. என்றாலும் ஒரு விடயத்தில் மட்டும் சரிநிகர் நிலை தளராமல் இருக்கிறது. துரதிஸ்டவசமாக அது ஒரு நல்ல காரியமாக இல்லை.

வடக்கில் பல விதமான நெருக்கடிகளுக்கு நடுவிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நீண்டகாலமாக போராடி வந்த இடது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் தொடர்ச்சியான புதிய ஜனநாயகக் கட்சிக்கும் எதிரான சிறுபிள்ளைத்தனமான விசமமே அது. அக்கட்சியோடு உறவுபடுத்தக்கூடிய பல வேறு அமைப்புக்களையும் அது விட்டுவைக்கவில்லை.

சரிநிகரில் வருகிற விடயம் எதுவும் தங்களை வெளிவெளியாய் அடையாளம் சொல்லுகிற ஒரு தனி நபரோ கட்சியோ அமைப்போ சொல்லுகின்ற ஒன்று என்றால் அது பற்றி எவருக்கும் மறுப்பில்லை. ஏனென்றால் தங்களுக்கு எதிரான கருத்துக்களைப்பற்றி மாக்ஸிஸலெனினிஸவாதிகள் பயப்படத்தேவையில்லை என்றாலும் ஒரு பத்திரிகை பல வேறு புனை பேர்களின் கீழ் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய விஷமப் பிரசாரத்திற்கு இடமளிக்கும் போது, நமக்கு அந்தப் பத்திரிகையின் அரசியல் பற்றிய சந்தேகம் எழுகிறது.

சரிநிகருக்கு ஒரு அரசியல் நிலைப்பாடு இருந்தால் சகிநிகர் அதை வெளியாகவே முன்வைக்கட்டும். சரிநிகரில் சொந்தப் பேரில் வராத எல்லாக் கட்டுரைகளிலும் வரும் கருத்துக்களுக்கும் அதுவே பொறுப்பை ஏற்கட்டும். எவ்வளவு கடுமையான எதிர்ப்பாக இருந்தாலும் அதற்கு நாங்கள் மரியாதை கொடுக்க முடியும். கோழைத்தனமாகப் புனை பெயர்களின் பின்னால் இருந்து தாக்குகிறவர்களுக்கு எவரும் மரியாதை செய்ய அவசியம் இல்லை. சரிநிகரில் வருகிற கருத்துக்களில் ஆசிரிய பீடத்தின் கருத்துக்கள் எவை என்று அறிய வாசகர்களுக்கு உரிமை உண்டு. புதிய இடதுசாரி முன்னணி பற்றி ஒரு முகமூடிக்காரர் சரிநிகர் 148ம் இதழில் எழுதிய கட்டுரையில் அப்பன் குதிருக்குள் இல்லை என்கிற விதமாக கட்டுரை எழுதியவருக்கும் பத்திரிகை ஆசிரிய பீடத்துக்கும் உள்ள உறவு தெளிவாகியுள்ளது. எந்த அடிப்படையில் ஜே.வி.பி. நடத்திய கூட்டத்தைப் பற்றிய தகவல்களை ஜே.வி.பி. தரப்பில் மட்டும் அறிந்து புதிய ஜனநாயகக் கட்சி மீது கண்மூடித்தனமாகக் குற்றச்சாட்டுகளை முன்வைக்க சரிநிகர் துணிந்தது என்று கேட்க விரும்புகிறேன்.

மூன்று வருடங்களுக்கு முன்பு நிதி மற்றும் பிற வசதிக் குறைவுகளால் புதியபூமி சிலகாலம் நின்று போனபோது சுப்பர்மாக்கெற் பத்திரிகையும் நின்றுவிட்டது என்று சரிநிகரில் ஒரு பத்திக்காரர் நக்கலாக எழுதினார்? சுப்பர்மாக்கெற் முகவரியில் பத்திரிகை என்பது உண்மைதான். தலைநகரில் வசதியான பகுதியில் குளுகுளு அலுவலகங்களில் கணனி வசதியுடன் ஆறேழு பேர் அமர்ந்து என்.ஜீ.ஓ. நிதி உதவியுடனே பத்திரிகை போட புதிய ஜனநாயக கட்சியிடம் வசதியில்லை. ஆசையும் இல்லை. நடுத்தெருப் பத்திரிகையாகக் கூடப் புதியபூமி இருக்கலாம். நக்கிப் பிழைக்கிற பத்திரிகையாக அது இருக்காது.

யூ.என்.பிக்கு எதிராக புதிய ஜனநாயக கட்சி எப்போதும் எடுத்து வந்த நிலைப்பாட்டுக்கு உடன்பாடாக பொதுசன முன்னணியின் வாக்குறுதிகளை முன்வைத்தே கடந்த தேர்தலில் இக்கட்சி பொதுசன முன்னணியை ஆதரித்தது. இந்த ஆதரவை பொதுசன முன்னணியுடனான கூட்டணி என்று முன்னால் குறிப்பிட்ட சரிநிகர் கட்டுரை திரித்துள்ளது. போதாக்குறைக்கு போனவாரம் வடக்கு–கிழக்கு இணைப்பை எதிர்த்தே தீருவதாகப் பேசியுள்ள ஜே.வி.பியின் தலைமையுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்ற கருத்தையும் அதே கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. தேசிய இனப் பிரச்சனையை வைத்தே அந்தப் பிரச்சனை பற்றி நியாயமான, உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிற ஒரு கட்சி மீது எகிறிப்பாய அவசியம் என்ன?

புதிய ஜனநாயகக் கட்சி பிற இடதுசாரிகளுடன் இணைந்து நடத்திய 1997 மேதினமும் சரிநிகரில் ஏளனமாகவே அன்று குறிப்பிடப்பட்டது. சரிநிகரில் வேறொரு அநாமதேயம் 'இடதுகள்' என்று இடதுசாரிகளை கேலியாக அழைத்தது. இன்னமும் கூட இடதுசாரிகட்கும் பாட்டாளி வர்க்கச் சார்பான இயக்கத்துக்கும் எதிரான மொட்டைக் கடிதப்பாணிக் கட்டுரைகள் சரிநிகரில் வந்து கொண்டே இருக்கின்றன.

இந்த மொட்டைக் கடித வரிசையில் தலித்தியக் குறிப்புகள் என்று ஏதோ எழுதுகிற புண்ணியவானும் வட இலங்கையின் சாதிய எதிர்ப்புப் போராட்டத்தில் இடதுசாரிகள் தொடர்ந்து ஆற்றிய பங்கை அறியாத தோரணையில் எழுதிக் கொண்டு போகிறார். மற்ற எந்த இந்திய மாநிலத்திலும் இல்லாத விதமாக தமிழகத்தில் மட்டும் பெரியாரியம், தலித்தியம் போன்ற பேர்களில் தாழ்த்தப்பட்ட மக்களை மாக்கிஸியத்திடமிருந்து அந்நியமாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. சரிநிகரில் முக்கியம் பெற்ற சில கட்டுரைகளைப் பார்க்கும் போது சரிநிகரும் அதே போக்கைப் பின்பற்றுவது போல தெரிகிறது.

இது என்.ஜி.ஓக்கள் நாட்டை ஆள விரும்புகிற யுகம். உண்மையாக என்.ஜி.ஓக்கள் மூலம் ஏகாதிபத்தியமே ஆள முடிகிறது. மலையகத்தில் என்.ஜி.ஓக்கள் தேர்தலில் நிற்கின்றன. விரும்பினால் சரிநகரும் தனது நிலைப்பாட்டை முதலில் தெளிவாக்கி விட்டு அரசியலில் இறங்கட்டும். அது பற்றி மகிழ்ச்சி அடைவோம். அதற்கு முதல் பத்திரிகையின் வருகிற மொட்டைக் கடதாசிகளுக்கான பொறுப்பை ஏற்கிற பக்குவத்தை ஆசிரிய பீடம் பெற வேண்டும்.

**கே. கமலநாதன், கொழும்பு 13.**

நன்றி - நூலகத்திட்டம்



# செங்கொடியை வீசிஎறிந்த இராமையா தொண்டாவின் காலடியில்

செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய உறுப்பினர்களில் ஒருவருமான ஓ.ஏ. இராமையா இ.தொ.கா. தலைவர் தொண்டமானின் தலைமையில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணியில் சேர்ந்து மாகாணசபை தேர்தலில் போட்டியிடுகிறார்.

இலங்கை கம்யூனிஸ்ட கட்சியிலுள்ள தமிழ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்த போதும் கட்சியில் தமிழ் பிரிவொன்றை ஏற்படுத்த முடியாது என்று அக்கட்சியின் தலைவர்கள் தெரிவித்ததாக கூறிவிட்டதாக அறியமுடிகிறது. கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தமிழ் பிரிவொன்றை ஏற்படுத்துவது இனவாதத்தை தூண்டும் என்பதால் அக்கட்சியின் தலைவர்கள் அக்கோரிக்கையை நிராகரித்துவிட்டதாக கூறப்படுகிறது.

ஆனால் அதன் மத்திய குழுவில் அங்கம் வகிக்கும் இராமையாவோ இந்தியவம்சாவளி மக்கள் பேரணியில் அங்கம் வகிக்கவும் அதன் பட்டியலில் தேர்தலில் போட்டியிடவூம் அனுமதிக்ககப்பட்டுள்ளார். தமிழ் பிரிவொன்றை ஏற்படுத்துவதையே இனவாதம் என்று கூறும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் எவ்வாறு இராமையாவுக்கு மேற்படி அனுமதியை வழங்கினர் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் உறுப்பினர் கேள்வி எழப்பியுள்ளார்.

பிற்போக்கு வாதியென்றும் முதலாளித்துவ வாதியென்றும் கம்யூனிஸ்ட் கட்சியால் அடையாளம் காணப்பட்டுள்ள தொண்டமானின் தலைமையை அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் ஏற்றுக்கொண்டு தொடர்ந்தும் அக்கட்சியில் எவ்வாறு உறுப்பினராக இருக்க முடியுமென்றும் அந்த தமிழ் உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனங்களுக்கென தனியான அமைப்பு இருப்பதையும், இன உரிமைகள் சுயநிர்ணய உரிமை கோரிக்கைகளை விடுவதையும் இனவாதம் என்றும் அவை பேரினவாதத்தை தூண்டும் செயல்கள் என்றும் கூறிவந்த இராமையா தற்போது அவருடைய அடையாளத்தை இந்தியத்தமிழர் என்று மாற்றிக்கொண்டார். அது மட்டுமன்றி அனைத்து மலையக மக்களையும் இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தை ஏற்க வேண்டும் எனவும் இந்திய வம்சாவளி மக்கள் பேரணியில் இணைய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகிறார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண்) யின் தலைவர்கள் சிறையில் இருக்கும் போது அக்கட்சியிலிருந்து செங்கொடிச் சங்கத்தைப் பிரித்து இராமையா அவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தை கட்டி வளர்ப்பதில் முன்நின்ற றொசாரியோவை திட்மிட்டு 1983 இனக்கலவரத்தின் பின் இந்தியாவிற்கு அனுப்பினார். சுந்தரம் போன்ற தலைவர்களை ஓரம்கட்டி ஆளுமையற்றவர்களாக்கினார். செங்கொடிச் சங்கத்தின் கீழ் அணி திரண்டிருந்த நூற்றுக்கணக்கான படித்த மலைக இளைஞர்களை இராமையாவின் சீர்குலைவான நடவடிக்கைகள் விரக்திக் குள்ளாக்கின.

செங்கொடிச் சங்கத்தின் மீதும் அதன் வளங்களின் மீதும் தனது கட்டுப்பாட்டை இறுக்கிக் கொண்ட இராமையா தன்னால் ஒரு காலத்தில் திரிபுவாத கட்சி என்றழைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி பற்றி எவ்வித நியாயப்பாட்டையும் முன்வைக்காது அக்கட்சியுடன் இணைந்து கொண்டார்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர தொழிற்சங்க அடிப்படையையே துடைத்தெறிய இராமையா முக்கியமானவராக இருந்தார் என்று கூறுவது பிழையாகாது.

இறுதியாக இன்று இந்திய வம்சாவளி மக்கள் பேரணியில் பிரவேசித்ததுடன் அவருடன் நம்பிக்கையுடன் இருந்த சில தோட்டத் தொழிலாளர் தோழர்களையும் நட்டாற்றில் விட்டுவிட்டார். தோழர் ராம் என்றும் அவரை நம்பிக்கையுடனும் இனிமையுடனும் அழைத்துவந்த தோட்டத் தொழிலாளர்களின் புரட்சிகர பலம் அவருக்கு இன்று தேவையற்றதாகி விட்டது.

திரு இராமையா செங்கொடியை வீசி எறிந்த விட்டு கம்யூனிஸத்தை காலால் உதைத்துவிட்டு தொண்டமானின் காலடியில் வீழ்ந்து விட்டது உண்மையே. ஆனால் மலையகத்தில் அந்த செங்கொடியை தாங்கி முன்னெடுக்க ஆயிரமாயிரம் மலையகத் தொழிலாளி வர்க்கமும் இளம் தலைமுறையினரும் படையெனத் திரண்டு கொண்டிருக்கின்றனர் என்பதை சரணாகதியடைந்த இராமையாக் களுக்கு கண்டு கொள்ள முடியாது.

# இதுதானா இலவசம்?

தொண்டமானின் ஏற்பாட்டினால் இலவச சிகிச்சை முகாம்கள் கொட்டகலை, தலவாக்கலை, லிந்துலை ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன. இலவச சிகிச்சை முகாம் என்றாலும் கண்பார்வை குறைந்தவர்கள் மூக்கு கண்ணாடிகளை பெறுவதற்கு 150 ரூபா செலுத்தியும் கண்ணாடிகள் வழங்கபடவில்லையாம். கண்ணாடிகளை வழங்க 1500ரூபா செலுத்த வேண்டியுள்ளதாம். இதுதான் இலவச கண் சிகிச்சை முகாம் என்று தோட்டத் தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இலவச சிகிச்சை முகாம்கள் பற்றி பிரசாரப்படுத்த தொண்டமானின் படத்தையும் போட்டு மூவர்ணங்களில் போஸ்ரர்கள் அடித்து மலையகமெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து வைத்தியர்கள் இங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். இவையெல்லாம் சரிந்த செல்வாக்கை நிலைநாட்டுவதற்காக செய்யப்படும் வேலைகள் என்று மலையக மக்கள் அறிவார்கள்.

இன்னும் எத்தனை எத்தனை 'இலவச' ஏமாற்றுக்கள் இடம்பெறப் போகிறதோ தெரியாது. எப்படியானாலும் மலையக மக்களை ஏமாற்றி வாக்குகளைத் தட்டிச் செல்வது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல.

## சிங்கள ஆணை.......

3ம்பக்கத்தொடர்ச்சி

வரலாறு தக்க உதாரணங்களாகும். இவை காட்டும் உண்மையாதெனில் இத்தகைய ஆளும் வர்க்கப் பிரதிகளுக்கு முன்பும் சரி பின்பும் சரி இனமொழி மத முக்கியத்துவம் என்பது உயர்வர்க்க சொத்துடைமையுடனும் ஆளும் வர்க்க அரசியலுடனும் சம்மந்தம் கொண்டதாக இருந்தமையேயாகும். ஐக்கிய தேசியக் கட்சியாகினும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியாகினும் தத்தமது ஆளும் வர்க்க நிலைப்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதில் பௌத்த சிங்கள பேரினவாதத்தை உரியவாறு பயன்படுத்தி வந்துள்ளனர். ஆளும் வர்க்க அரசியல் சக்திகளைப் பொறுத்தவரை இந்த நூற்றாண்டின் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பௌத்த சிங்கள இனவாதிகள் கிளப்பிய பேரினவாதப் பேரவைகளை எதிர்த்து நின்றதில்லை. அவற்றை ஏற்று அடிபணிந்து போன வரலாறு தான் இலங்கை அரசியலில் நீடித்து வந்துள்ளது. அதிகாரத்தில் பங்கு கொள்வதையிட்டு சிந்திக்காது தொழிலாளி வர்க்க இயக்கத்தை முன்னெடுத்து வந்தவரை பேரினவாதத்திற்கு வளைந்து கொடுக்காது இலங்கையின் இடதுசாரிகள் இருந்து வந்துள்ளனர் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தினுள் புகுந்து அதிகாரத்தின் பங்காளிகளாகிக் கொண்டதுடன் அவர்களும் பேரினவாதத்தின் முன்னால் சம்மணம் கட்டி சாதுசாது சொல்லி பிரித்நூல் கட்ட ஆரம்பித்து விட்டனர். ஆனால் அவர்கள் அவ்வாறு விட்டுச் சென்ற இடத்திலிருந்து பேரினவாதத்தை விடாப்பிடியாக எதிர்த்தும் விமர்சித்தும் வருகின்ற நேர்மையான சிங்கள புத்திஜீவிகளும் இடதுசாரிக் கட்சிகளும் தமது பணியினைத் தொடர்ந்துதான் வருகிறார்கள்.

சிங்கள ஆணைக்குழு மூலம் பௌத்த சிங்கள பேரினவாதத்தை முன்தள்ளி வரும் இன்றைய சூழலில் அதனை எதிர்த்து முகம் கொடுக்க வேண்டிய கடுமையான சவால்களை இடதுசாரி சக்திகளும் நேர்மையான புத்திஜீவிகளும் எதிர் கொள்கின்றனர். அதனை எதிர்த்து முறியடிக்காது இந்த நாட்டிற்கு எந்த விதமான விமோசனமும் இருக்க முடியாது.

பேரினவாதிகளுக்கும் அவர்களது கூச்சல்களால் குழப்பமடையும் சாதாரண சிங்கள மக்களுக்குமிடையிலான வேறுபாடுகளை அடையாளம் காண்பது மிகமிக அவசியமாகும். உழைக்கும் மக்கள் அனைவரையும் அவர்களது வர்க்க நிலைகளில் அணிதிரட்டுவதன் மூலமும் பேரினவாதக் கூச்சல்களின் பின்னால் மறைந்து நிற்கும் வர்க்க நலன்களையும் வர்க்க சக்திகளையும் அடையாளம் காட்டும் வேலைகள் விரிவு பெறும் போதே பேரினவாதம் படிப்படியாக முறியடிக்கப்பட முடியும். இக்கடுமையான பணி முன்னெடுக்கப்படுவதை நேர்மையான இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் மேலும் வலிமையுடன் தமது கைகளில் எடுத்துக் கொள்வது அவசியமாகும். ●

# இந்திரா போயி இந்துத்துவா வந்தது டும், டும், டும்.

பழைய சிறுவர் கதை ஒன்று:

ஒரு குரங்குக்குப் பிட்டத்திற் கொப்பளம். அதைக் கீறிவிடுமாறு குரங்கு ஒரு நாவிதரை நாடியது. நாவிதர் கீறிய போது குரங்கு துள்ளவே வால் அறுந்து விட்டது. குரங்கு இழந்த வாலுக்கு நட்ட ஈடாக நாவிதரது கத்தியைப் பறித்துக் கொண்டது. பிறகு கத்தியை வேறொரு பொருளுக்கு ஈடாக மாற்றியது. இப்படியே மாற்றி மாற்றி இறுதியாக ஒரு மேளத்தைப் பெற்றது. மேளத்தைப் பெற்ற குரங்கு "வாலு போச்சு கத்தி வந்தது" டும் டும் டும் என்ற விதமாகத் தன் கதையைத் தாளத்துடன் சொன்னதாகக் கதை. வால் போனது போனதுதான்.

நமது தமிழ் விடுதலை இயக்கங்கள் பலவுமே இந்திரா காந்தி தயவில் தமது அரசியலை வளர்த்து ஒவ்வொருவர் தயவு போக இன்னொருவர் தயவில் தமது பிழைப்பை நடத்திக் கடைசியாக எந்த இந்திய மேலாதிக்க குறுக்கீட்டால் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் சீரழிந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்களும் இன்னும் பலரது உடைமைகளும் பறிபோயினவோ அந்த மேலாதிக்கத்தின் அதிதீவிரமான குறியீடாக உள்ள இந்துத்துவ பா.ஜ.க. அரசின் எசமானர்களிடம் இலங்கையின் பிரச்சனையைத் தீர்க்கும் படி இன்று கெஞ்சுகிறார்கள். குரங்குக்கு வால் போனாலும் புத்தியாவது மிஞ்சியது. இயக்கத் தலைமைகளுக்கு?

## சூரியகந்த.......

8ம் பக்க தொடர்ச்சி

கொலைகள் பற்றி அரசாங்கம் அதிகம் செய்யவில்லை. எந்த அரசாங்கமும் தனது ஆயுதப் படைகளது வெகுசன விரோத குற்றச் செயல்களை உரியவாறு தண்டித்ததாக இந்த நாட்டில் வரலாறு இல்லை. கணிசமான நெருக்குவாரத்தின் விளைவாக 1971ல் கதிர்காமத்தில் நடந்த மானம்பரி கொலை விசாரிக்கப்பட்டது. அன்றைய நிகழ்வை விட மோசமான இனஅழிப்பு கடந்த பதினைந்து வருடங்களாக நடக்கிறது. செம்மணி விசாரணை மூலம் காணாமற் போனோர் பற்றிய தகவல்கள் ஓரளவாவது கிடைக்கலாம். அதற்கு மேலாக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்குமா என்பது சந்தேகம். ஏனெனில் கிருஷாந்தி, கோணேஸ்வரி போன்றோர் விடயங்களில் விரக்தியடைந்த கீழ்மட்டப் படையினரின் பாலியல் வக்கிரமும் குழம்பிய சிந்தனையும் இனவாதமும் அவர்களது குற்றங்கட்கு காரணம் எனலாம். இவற்றைவிட மோசமானது திட்டமிட்ட முறையில் நடத்தப்படும் இன ஒழிப்பும் அச்சுறுத்தும் முறையிலான படுகொலைகளும் அவற்றின் மூடி மறைப்பும் ஆகும். இவற்றுக்கு பொறுப்பானோரின் தயவில் அரசாங்கம் இருக்கும் வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிட்டாது.

ஆயிரக் கணக்கில் கொலை செய்யப்பட்டும், காணாமற் செய்யப்பட்டும் போன சிங்கள வாலிபர்கள் பற்றிச் சில சிங்கள ஏடுகள் இன்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. இது மனிதாபிமானத்தால் அல்ல. செம்மணி மர்மங்கள் பற்றிச் சிங்கள மக்கள் மத்தியில் அக்கறை வராமல் அவர்களது கவனத்தைத் திருப்புவதில் நமது பத்திரிகைச் சுதந்திரம் நன்கு பயன்படுகிறது.

'சூரியகந்த' யூ.என்.பியின் வீழ்ச்சிக்கு அளித்த பங்கு பெரிது. சிங்கள மக்கள் இன்னும் அந்த நினைவிலிருந்து மீளவில்லை. செம்மணியில் புதையுண்டுள்ளவை சூரியகந்தையில் புதையுண்டவற்றை விட இந்த அரசாங்கத்துக்கும் என்றால் அதை இன்றே அறியும் தேவையும், உரிமையும் பெற்றோருக்கும் அதன் உறவினருக்கும் மட்டுமன்றி இந்தமண்ணில் நியாய உணர்வுள்ள ஒவ்வொரு மனிதருக்கும் உண்டு. அந்த உண்மையைப் புதைக்க முயலுகிற அதிகாரம் சகல இன.மக்களுக்கும் தீங்கானது.

லத்தின் அமெரிக்காவின் பல நாடுகளில் ஏகாதிபத்திய எடுபிடி ஆட்சியாளர்களும் இவ்வாறே பல நூற்றுக்கணக்கான சாதாரண மக்களையும் நியாயத்திற்காக குரல் கொடுத்த மனிதாபிமானிகளையும் கொன்றும் காணாமற் போக்கியும் உள்ளனர். ஆனால் இன்று உண்மைகள் புதைகுழிகளிலிருந்தும் பிணங்களை எரித்த சாம்பலினின்றும் தூக்கி எறிந்த கிணறுகளிலிருந்தும் நீர்நிலைகளினின்றும் பூதாகரமாக எழுகின்றன. அவை ஆட்சியாளர்களையும் அவர்களது எசமானர்களையும் நோக்கிச் சுட்டுவிரலை நீட்டுகின்றன.

இந்த அரசாங்கமும் இன்று செம்மணி பற்றி இதய சுத்தியுடன் செயற்படத் தவறுமானால், இக்கொலைகளைச் செய்த பாதகர்கள் அளவுக்கு அரசாங்கத்தையும் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கும். எதிர்காலம் தன்னை எவ்வாறு நோக்க வேண்டும் என்று ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆயினும் செம்மணியின் புதையுண்ட உண்மைகள் நிரந்தரமாகவே ஒழிந்து போகாத விதமாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துப் போராடுவது சகல முற்போக்கு சக்திகளதும் மனிதாபிமானிகளினதும் தவிர்க்க கூடாத கடமை ஆகும். ■

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI

සුදියපූමි

சுற்று 05 ஆகஸ்ட் 1998 பக்கம்-12 விலை ரூபா10/= சுழற்சி 22


## வடக்கில்........

1ம் பக்கத் தொடர்ச்சி

அவற்றால் அரைவயிறு கால் வயிற்றை நிரப்பிவந்த இடம் பெயர்ந்த மக்களுக்கு மேற்படி நிவாரண வெட்டு நிரந்தரப் பட்டினியை வழங்கியுள்ளது. குண்டுகளைக் கொட்டி யுத்தம் நடாத்தும் அரசாங்கம் நிவாரணத்தை வெட்டி மக்களைப் பட்டினியால் பழவாங்க முற்பட்டுள்ளது. இந்த நிவாரண வெட்டால் மீதப்படுத்தப்படும் பணம் யுத்தத்திற்கும் குண்டுகளுக்கும் தான் செலவிடப்பட உள்ளது. வழங்கப்பட்ட நிவாரணம் மக்களின் பணத்திலிருந்தே வழங்கப்படுகிறதே தவிர ஜனாதிபதியினதோ பாதுகாப்பு அமைச்சினதோ வீட்டுப்பணம் அல்ல. மக்களின் மீது யுத்தத்தை கட்டாயப்படுத்தி திணித்து நடாத்தினால் அதன் பாதிப்புகளுக்கு உரிய இழப்பீட்டை நிவாரணத்தை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தட்டிக்கழிக்க முடியாத கடமையாகும். அதைச் செய்யத் தவறினால் பாகுபாடு புறக்கணிப்பு மக்களை பட்டினி போட்டுக் கோல்லுதல், போன்ற மனித விரோத செயல்களை அரசாங்கம் செய்கின்றது என்பதே அர்த்தமாகும். எனவே இந்த அநீதியை அக்கிரமத்தை மக்கள் அணி திரண்டு தட்டிக் கேட்கும் பலவகை இயக்கங்களை முன்னேடுப்பது தான் சரியான வழியாகும்.

## மலையகத்தை........

1ம் பக்கத் தொடர்ச்சி

இவரின் இப்படியான நிலைப்பாடு பேரினவாதத்திற்கு எதிராக இருக்கின்ற, பாரம்பரிய காட்டிக்கொடுப்பு தலைமை களுக்கு எதிரான மலையக இளைஞர்கள் மிகவும் இலகுவாகவே பழிவாங்கப் பட வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

சம்பிக்க ரணவக்க, மாதுலாவே சோபித தேரோ போன்ற சிங்களப் பேரினவாதிகளின் வழிகாட்டலில் எல்லா தரப்பிலும் இருக்கின்ற பேரினவாதிகளையும் அணிதிரட்டி இயங்குகின்ற அமைப்புதான் பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி. இந்த முன்னணியில் ஓய்வு பெற்ற பாதுகாப்பு படை வீரர்களும், அதிகாரிகளும் தற்போது சேவையிலிருக்கும் சில பாதுகாப்பு படை வீரர்களும், அதிகாரிகளும் இருப்பதாக கூறப்படுகிறது. இதில் சிங்கள முன்னணி, சிங்கள பூமிபுத்திரர் கட்சி, சிங்கள பாதுகாப்பு சபை, சில பிக்குமார் சங்கங்கள் போன்ற பலவிதமான சிங்கள அமைப்புகளும் இணைந்துள்ளன.

இம்முன்னணி இனவாதத்தை தூண்டி தமிழ் மக்களுக்கும், மலையகத்தமிழ் மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் எதிரான துவேஷத்தை வளர்த்து நாடெங்கும் போஸ்டர் இயக்கங்களையும், கூட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றது. இதனால் தமிழ், முஸ்லீம் மலையக மக்களுக் கெதிரான இனரீதியான மோதல்கள் இடம்பெற வாய்ப்புண்டு.

சிங்கள வியாபாரிகள், பெரிய வர்த்தகர்கள் தொழிலதிபர்கள், தொழில்சார் நிபுணர்கள் ஆகியோரைக் கொண்டு முன்னணியின் பொருளாதாரம் கட்டப்படுவதாகவும் அறியமுடிகிறது.

இம்முன்னணியுடன் அரசாங்கத்தையும், எதிர்கட்சியையும் சார்ந்தவர்களும் நாட்டின் பாதுகாப்பிற்கு பொறுப்பான சிலரும் நெருங்கிய தொடர்பை வைத்திருப்பதாக அறியமுடிகிறது. மாகாணசபை தேர்தல் ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று இம் முன்னணியும் வலியுறுத்தி வந்தது தெரிந்ததே.

## பேரினவாத........

1ம்பக்கத் தொடர்ச்சி

ஜனாதிபதியும் வேண்டாம் உயர் ராணுவசபையே நாட்டிற்கு தலைமை தாங்க வேண்டும் என நாளை இதே நபர்கள் தீர்மானித்தால் அதுவே நடைமுறைக்கு வந்துகொள்ள அதிக வாய்ப்பே காணப்படுகிறது. ஏனெனில் தேர்தல் நடத்தக் கோரியவர்களின் கைகள் கட்டப்பட்டு குரல்கள் அமுக்கப்பட்ட பரிதாபம் அரசாங்கத்தினுள் இடம்பெற்றது. பேரினவாத ராணுவ சர்வாதிகாரத்தை நோக்கிய யுத்தப் பயணத்தின் தொடக்கத்தை உத்தியோக பூர்வஅறிவிப்பாக வெளியிட்டு இருப்பது தான் நாடுதழுவிய அவசரகாலச் சட்டமும் தேர்தல் ஒத்திவைப்புமாகும்.

ஆதலால் ஜனநாயக மனித உரிமைகளுக்காக, இருண்ட காலகட்டத்தை தடுப்பதற்காக, யுத்தத்தை ஒழக்கும் 'நியாயமான அரசியல் தீர்வுக்காக், சகல மக்களினதும் நல்வாழ்வுக்காக் நாடு தழுவிய பரந்துபட்ட மக்கள் இயக்கங்கள் மேன்மேலும் முன்னேறிச் செல்லல் வேண்டும். வெகுஜன அணிகள் பலப்படுத்தப்பட வேண்டும். சகல இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளும் மக்களது அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒன்றுபட்டு செயல்பட முன்வரல் வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

# தமிழ்க் கட்சிகளின் எதிர்பார்ப்பு என்ன?

## அந்நிய சக்திகளுக்கு மண்டியிடுவதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகளே அதிகம்

தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்ப்பதில் இந்திய அரசிடம் தமிழ்க்கட்சிகள் எதிர்பார்ப்பதென்ன என்பது தெளிவில்லாதிருக்கின்றது. ஆனால் இந்தியா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றன. சார்க் மாநாட்டிற்காக கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பேயிடம் தமிழ்க் கட்சிகள் தனித்தனியே மகஜர்களை கொடுத்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும், தேசிய நீரோட்டத்துக்கு திரும்பி விட்டதாகக் கொள்ளப்படும் முன்னாள் தீவிரவாத அமைப்புகளும் இந்தியாவிடம் எதைக் கேட்பது என்பதில் மட்டுமல்ல இந்தியப் பிரதமரை ஒரே நேரத்தில் சந்திப்பதில் கூட உடன்பாட்டை காண முடியாதிருந்தன.அதனால் இந்தியத் தூதரக ஏற்பாட்டில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் அவற்றின் மகஜர்களை இந்தியப்பிரதமரிடம் கையளித்துள்ளன. அதற்கான வாய்ப்பை மட்டுமே பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க தூதுகோஷ்டியொன்று கொழும்புக்கு வந்திருந்தபோது அமெரிக்காவே இலங்கை தமிழினத்தின் இரட்சகர் என்று அக்கோஷ்டியின் தயவை தமிழ்க்கட்சிகள் நாடியிருந்தன. அமெரிக்கா இலங்கை விவகாரங்களில் மிகவும் நெருங்கி வருவதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சு வாஜ்பேய் அரசாங்கத்தின் முக்கியமானவரான ஜா வினூடாக இராஜதந்திர ரீதியாக அதன் அதிருப்தியை தெரிவித்திருந்தது. அதற்கு பின்னர் இந்திய அரசாங்கத்தின்பால் தமிழ்க்கட்சிகளின் கவனம் மீண்டும் திரும்பியுள்ளது.

பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அழுத்தத்தை கொடுக்கும் வகையில் இந்தியா தலையிட வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கோருகின்றன. இந்தியா எவ்வகையிலாவது தலையிடத் தயாரா என்று அறிய முடியாவிட்டாலும் "தமிழ்க் கட்சிகள் இந்தியாவை தலையிடும்படி போதியளவு வற்புறுத்தலை செய்யவில்லை" என்று கொழும்பிலுள்ள இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்பதை அறிய முடிகிறது. இந்தியாவுக்கு சென்று இந்திய அரசாங்கத்தை அணுக வேண்டும் என்று இந்திய அரசு விரும்புவதாக தெரிகிறது.

இது இவ்வாறிருக்க தமிழ்க்கட்சிகள் இந்தியாவை தலையிடக் கோருவதை அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். எனவே அமெரிக்க நலனில் மிகவும் அக்கறை கொண்டதாக இருக்கும் சந்திரிகா அரசாங்கத்தினை மீறி தமிழ்க்கட்சிகள் இந்தியாவை அணுகுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஏனெனில் சந்திரிகா அரசாங்கத்துடன் அந்தளவுக்கு ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க்கட்சிகள் இந்தியாவிடம் எதனை எதிர்பார்க்கின்றன என்பது தெளிவில்லை.

அத்துடன் ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் இந்திய அரசிடம் மண்டியிட்டதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளே அதிகம். அதேவகையான எதிர்பார்ப்பையா தமிழ்க்கட்சிகள் மீண்டும் கொண்டிருக்கின்றன?

சிங்கள மக்களும், இடதுசாரிகளும் எப்போதுமே தமிழ் மக்களினதும், தமிழ்கட்சிகளினதும் அபிலாஷைகளையும் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்று விரும்பும் தமிழ்க்கட்சிகள் காலத்துக்கு காலம் இலங்கை அரசாங்கங்களிடமும் வெளிநாட்டு அரசாங்கங்களிடமே தொடர்ந்து மண்டியிட்டு வருகின்றன. ஆனால் பெரும் பான்மையான சிங்கள மக்களை ஒருபோதும் அணுக முயற்சிப்பது கூட இல்லை.

அது மட்டுமல்ல சிங்கள மக்களின் பிரச்சினைகளில் அக்கறையில்லாமல் இருப்பது மட்டுமன்றி தமக்கு அதில் அக்கறையில்லை என்பதை தெளிவாகவும் பறைசாற்றவும் தவறுவதில்லை.

அவசரகால சட்டத்தை நாடெங்கும் பிரகடனப்படுத்தி அரசாங்கம் மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைத்தபோது மாகாணசபை தேர்தலை ஒத்திவைப்பது பற்றி தனக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்று ஒரு தமிழ்க்கட்சியின் தலைவர் பாராளுமன்றத்தில் பேசியிருந்தார். இ.தொ.காவும், ஈ.பி.டி.பியும் மேற்படி அவசரகாலச் சட்டப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

அவசரகாலச்சட்டத்தை நாடெங்கும் அமுல் செய்யும் பிரேரணையை ஆதரித்ததன் மூலம் பெரும்பான்மை சிங்களமக்களது ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கு மட்டுமன்றி மலையக முஸலீம் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் மறுப்பதற்கும் உதவியுள்ளனர். வடக்கு கிழக்கு மக்கள் மீது புரியப்பட்டுவரும் அடக்கு முறைகள் மலையக மக்களின் மீதும் புரியப்பட சம்மதமளிப்பதாகவே மேற்படி ஆதரவு அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் போராட்டத்தில் மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையில் இருக்கும் தமிழ் கட்சிகள் தமிழ் மக்களினது உரிமைகளை மறுப்பதற்கான நடவடிக்கைகளை மட்டுமன்றி சிங்கள, முஸ்லீம், மலையக மக்களினது உரிமைகளை மறுக்கும் நடவடிக்கைகளையும் ஆதரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது மிகவும் துர்ப்பாக்கியமானதாகும்.

யுத்தத்தை நிறுத்தி அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கு ஏதாவது செய்யமுடியுமாயின் அதுவே தமிழ்க்கட்சிகளுக்கு மீதமாக இருக்கும் ஒரேயொரு அரசியல் கடமையாகிறது எனலாம்.

அக்கடமையை நிறைவேற்ற வேண்டுமாயின் வெளிநாட்டு சக்திகளின் மேலாதிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு தமிழ் மக்களின் போராட்டத்தையும், தமிழ் மக்களையும், இலங்கை நாட்டையும் ஏனைய தேசிய இனங்களையும் அடிமைப்படுத்தாமல் நடவடிக்கைகளை மேற்கொள்வதே செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகளாகும். அதற்கு சிங்கள மக்களையும், இடதுசாரி முற்போக்கு சக்திகளையும் மையப்படுத்தி செய்யப்படவேண்டிய அரசியல் கடைமைகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியாது. இவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் பழமைவாத தமிழ்த் தலைமைகளிலிருந்து தமிழ்க்கட்சிகள் தம்மை வேறுபடுத்திக் காட்ட முடியும். இதனை அவர்கள் செய்வார்களா?



நுவரேலியா புதிய நகர மண்டபத்தில் இடம் பெற்ற புதிய ஜனநாயக கட்சியின் 20வது ஆண்டு நிறைவு விழாவில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா ஆகியோர் உரையாற்றுவதை முதலாவது இரண்டாவது படத்திலும். கட்சியின் மூத்த உறுப்பினரான தோழர் இ.கா. சூடாமணி அவரது தொடர்ச்சியான கட்சிப் பணிக்காக செங்கொடி போர்த்தி சிவப்பு ரோஜா மலர் கொத்து வழங்கி கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு லக்ஸ் கிராபிக் (பிரை) லிமிட், 98, விவேகானந்த மேடு கொழும்பு 13.